உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௧.] 1912-௵ செப்டம்பர், அக்டோபர்மீ-[பகுதி ௯, ௰.

## சதுர்த்தம்.

வேதத்தின் ஞானகாண்டங்களாகிய மாண்டூக்யோபநிஷத்தில் "ப்ரபஞ் சோமசமம் சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே" எனவும், நிருசிம்மபூர்வதாபிந்யுபநிஷத்தில் "ப்ரபஞ்சோப சமம் சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே" எனவும், நாரத பரிவ்ராஜ கோபநிஷத்தில்" ப்ரபஞ்சோப சமம்சிவம்சாந்த மத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே" எனவும், ராமோ தரதாபி நீயோபநிஷத்தில் "ப்ரத்யயஸாரம் ப்ரபஞ்சோப சமம்சாந்தம் சிவம்த்வைதம் சதுர்த்தம் மந்யந்தே" எனவும், பஸ்மஜாபாலோபநிஷத்தில் "அத்வைதம் சதுர்த்தம் ப்ரம்ம விஷ்ணுருத்ராதி தமோ மாசாஸ்யம் பகவந்தக் சிவம்" எனவும், வரும் வசனங்களில் நான்காவது தெய்வத்தை விளக்கு நிமித்தம் " சதுர்த்தம் " எனும் வாக்கியத்தோடு வெளிப்பட்டு விளங்குகின்றது. அன்றியும்! திரிபுராதாபிந்யுபநிஷத்தில் "சதாசிவோட்சரம்" எனலால், அட்சரமாவார் சிவம்என வேறபட்டு, பரப்ரம்மோபநிஷத்தில் "ஜாகரி தேப்ரம்மா ஸ்வப்நே விஷ்ணுஸ்சுஷுப் தௌருத்ரஸ் துரீயமட்சரம்" என்றதனால் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி யெனும் அவஸ்தா திரயங்களுக்குரிய பிரமன் விண்டு ருத்ரன் என்னும் மூவர்க்கு மேலான துரீயம் (சதுர்த்தம்) சிவமெனவும், நிருசிம்மோத்தர தாபிந்யுபநிஷத்தில் "அகாரம் பிரஹ்மாணம்" "உகாரம்விஷ்ணும்" "மகாரம்ருத்ரம்" "ஓங்காரம் (சதுர்த்தம்) ஸர்வேச்வரம்" என்றதனாலும், அதர்வசிகோபநிஷத்தில் "ப்ரம்மவிஷ்ணுருத்ரேந்த்ராஸ்ஸம்ப்ரஸூயந்தே ஸர்வாணி சேந்த்ரியாணிஸஹபூதைர் நகாரணம் காரணாம்த்யாதாகாரணந்துத்யே யஸ்ஸர்வைச்வர்யஸம்பந்நஸ்ஸர்வேச்வரச் (சதுர்ந்தம்) சம்புராகாசமத்யே" எனவும் வரும் வட

மொழி வேதங்களிலும்; திருக்கடைக்காப்பில் "ஒருருவாயினை ............படைத்தளித் தழிப்பமும் மூர்த்திகளாயினை" எனவும், தேவாரத்தில் "ஆதியும் மரனாயய்ன் மாலுமாய்ப், பாதி பெண்ணுருவாயபரமன்" எனவும், திருப்பாட்டில் "மூவராயுமிருவராயு முதல்வனவனேயாம்" எனவும், திருவாசகத்தில் "மூவர்கோனாய் நின்ற முதல்வன்" "மூவரும் முப்பத்து மூவருமற்றொழிந்த தேவருங்காணாச் சிவபெருமான்" "மூவராலு மறியொணா முதலாயவானந்த மூர்த்தியான்" "மூவரறியாச் சிந்துரச்சேவடியானை" எனவும் வரும் தமிழ்வேதங்களிலும் திரிமூர்த்திகட்கும் மேலாய நான்காவது (சதுர்த்தம்) தெய்வம் சிவமெனமுடிவு காண்க.

மாண்டூக்யோபநிஷத்தில் ஸ்ரீ இராமானுஜர் என்பவர் அதனிலுள்ள சிவயென்பதற்கு மங்களஸ்வரூபமென்றும், சதுர்த்தமென்பதற்குச் சங்கர்ஷண பிரத்யும்ந அநிருத்தரெனும் மூவர்க்கும் லயஸ்தானமான வாசுதேவனென்றும் பொருள் கொண்டமை பொருத்தமோ எனின், மேற்காட்டிய உபநிடதங்களிலுள்ள வசனங்கடோறு மிருக்குந் தெய்வப்பெயர் "சிவம்" என்றேயிருத்தலினாலும், மேலுதகரித்த அதர்வசிகோபநிஷத்வசனத்தில் பிரமன் விண்டு ருத்திரன் இந்திரனாகிய இவரெல்லாம் படைக்கப்படுகின்றனர். இந்திரியங்களெல்லாம் பூதங்களோடு பிறப்பிக்கப்படுகின்றன. ஆகலின் அவர்களும் அவைகளும் காரணமில்லை. தியாதாவாகிய அவர்களாலே தியானிக்கப்படும் தியேயனெனும் சருவைச்சுவரிய சம்பன்னனும், சருவே சுவரனும், சம்புசத்தவாச்சியனும், பரமாகாச மத்தியத்தி லிருப்பவனுமான சிவனே காரணன் எனப் பிரகாசித்தலினாலும் ஸ்ரீ இராமானுஜர் என்பவர் கொள்கை மறுக்கப்பட்டதென்க. அன்றியும் நாலாயிர பிரபந்தத்தில், "மூவரிலெங்கண் மூர்த்தியிவனென முனிவரோடு தேவர் வந்திறைஞ்சுநாங் கூர்த்திருமணிக் கூடத்தானே" "மூவரிலொருவராய வொருவனையுலகங் கொண்ட கோவினை" எனத் திருமங்கை மன்னரும், "முதலாவார் மூவரேயம் மூவருள்ளு முதலாவான் மூரிநீர்வண்ணன" எனப் பொய்கையாருங் கூறியிருத்தலின் ஆழ்வார்களும் தங்களை விண்டு சதுர்த்தமல்லரென காட்டிய வாறாயிற்று. இவை முதலிய காரணங்களால் சிவமே சதுர்த்தமென்பது வச்சிரலேபமாம். சுபம். மணவழகு.

# சைவ சமயத்தைக் குறித்த ஒரு சம்பாஷணை.

சென்னை மாநகரில் திருமயிலையில் உள்ள ஒரு தெருவில் சிவஞானம், சுந்தரம் என்னும் இரண்டு சிறுவர்கள் சிலகாலத்திற்கு முன்பு வசித்து வந்தனர். அவர்களிருவரும் ஒரே வயதினர். சைவ சமயத்தைப் பின்பற்றிய தாய்தந்தையரையுடையோர். அறிவிலும் சற்றேறக்குறையச் சுந்தரத்தைச் சிவஞானத்திற்குச் சமமானவனென்றே சொல்லலாம். இவ்விருவரும் இராயப்பேட்டையிலுள்ள பாதிரிமார் பாடசாலையில் நாலாவதுபாரம்வரையில் ஒருங்கே கல்விபயின்றார்கள். பிறகு குடும்பத்தில் நேர்ந்த கஷ்டங்களினால் சுந்தரம் கலாசாலைக்குப் போகாது நின்று விட்டான். ஆனாலும் பெரிய வாணிகஸ்தலங்களில் உத்தியோகத்தி லமரவேண்டியோர்க்குரிய 'புக்கீபிங்' 'டைப் ரைடிங்' முதலிய சில பரீட்சைகளில் இரண்டு வருடத்தில் தேறி இரங்கூன் நகரத்திற்குச் சென்று அங்கிருந்த தன் உறவினர் உதவியால் ஒரு பெரிய ஐரோப்பிய வாணிப சாலையில் நல்ல அலுவலில் அமர்ந்தான். சில ஆண்டுகளுள் அவனுக்குத் திரண்டசெல்வஞ் சேர்ந்தது. சிவஞானமோ, பல வகையான இடையூறுகள் நேர்ந்தும் அவைகளால் மனச்சோர் வடையாமல் கல்விக்காக உழைத்து பி. ஏ. பரீட்சையில் நன்கு தேறினான். இக்காலத்தில் ஆங்கிலக் கல்விகற்கும் வாலிபர்களிற் பலர், தாம் உயர்தரப் பரீட்சையில் தேறுவதெல்லாம் பெரிய உத்தியோகங்களி லமர்ந்தோ, அன்றேல் சட்டத்திருமுறைநூலையோதியோ மற்றெவ்வாற்றாலாயினும் பெரும்பொருள் சேகரித்து உலக இன்பத்தைப் புலன்களார நுகர்தற்கே, என்னுங்கொள்கை பூண்டொழுகுகின்றனர். ஆனால் சிவஞானம் இந்த அவஞானத்தால் மயக்குறவில்லை. தான் அதுவரையிற்கற்ற கருவி நூல்களினாலேயே மனிதப்பிறப்பின் லக்ஷியத்தை யடைய முடியாதென்றும், மனிதன் தன்னியல்பையும் தலைவனியல்பையும் அறிந்து அழிவில்லாப் பேரின்பம் அடையும் வழிகளை நன்கு தெரிந்துகொள்ள வேண்டுமாயின், சமயநூலாராய்ச்சி செய்யல் இன்றியமையாத தென்றும், தான் கற்றகல்விதனக்கு மாத்திரமன்றிப் பிறருக்கும் பயன்படற்பொருட்டே என்றும் உண்மையுணர்ந்து, கலைப்புலமையோடு சமயநூற்படிப்பையும் நல்லொழுக்கத்தையும் மேன்மேல் வளர்த்துவந்தான். இவ்விரண்டு நண்பர்களும் வெகுதொலைவிலுள்ள பட்டினங்களில் தனித்தனி வசிக்கவேண்டிவந்தும் தமது நட்பை மறந்து விடவி

ல்லை. குடும்ப க்ஷேமங்களைப் பற்றி அடிக்கடி ஒருவர்க் கொருவர் கடிதமெழுதுவதுண்டு. இவ்வண்ணம் சுமார் பத்து வருடங்கள் கழிந்தபின்பு, சுந்தரம் தன் தாய் நாடாகிய தமிழகத்தையும் தன் னின்னுயிர் நண்பனாகிய சிவஞானத்தையும் காண வேண்டுமென்னும் ஆசையோடு சென்னைக்குவந்து ஒரு ஞாயிற்றுக் கிழமைகாலையில் சிவஞானத்தின் இருப்பிடம்போய்ச்சேர்ந்தான். இவன் வருகையைக்கண்ட சிவஞானம் நேசனைக் கைகுவித்து முறையால் வணங்கி அகமுகமகிழ்ச்சியோடு வரவேற்க நின்றான். “ Dear friend, good morning!” என்கிற சொற்களோடும் சுந்தரம் சிவஞானத்தோடு கைகுலுக்கி வீட்டிலிருந்த நாற்காலியி லமர்ந்ததும், சிவஞானத்தின் புதல்வியாகிய புனிதவதி தன் தந்தையின் நண்பர் வீட்டிற்கு வந்ததைத் தாயுடன்சொன்னாள். உடனே பாதோதகம் வர, சுந்தரம் அச்செம்பினையும் தான் தரித்து வந்த ஆங்கிலச் செருப்பின் முடிகளையும் நோக்கி விழித்துக்கொண்டிருக்கையில், “தங்களுக்குத் தாகத்திற்கு வேண்டுமோ வென்றும் .இன்னுரையும் பிறந்தது. சுந்தரம் சில விநாடிகள் கழித்து “Thanks, just now காபி drink பண்ணி வந்தே னென்றான். பின்பு ஒருவாறு இக்குழப்பத்தி னின்றும் தெளிந்த சுந்தரம் தனது நண்பனை உற்று நோக்கி,

“ என்ன சிவஞானம்! எல்லாம் ஓல்டு வேஷமாயிருக்கிறதே நீ பூசியிருக்கும் சாம்பலையும் போட்டிருக்கும் கொட்டைமாலையையும் பார்த்தால் நீ தானா பி. ஏ. pass பண்ண சிவஞானம் பிள்ளையவர்களென்று doubt (சந்தேகிக்க) பண்ண வேண்டியிருக்கிறதே? இது என்ன wonder” (ஆச்சரியம்) என்றான்.

சி:—(புன்சிரிப்போடு) சுந்தரம்! என்னிடத்தில் என்ன புதியமாறுதல் கண்டாய்? நமது முன்னோர்கள் காட்டிய வழிப்படி தானே நடக்கமுயல்கின்றேன்.

சு:—நான் சொல்வதும் அதுதான். இவ்வளவு educated (படிப்பாளி) ஆய் இருந்தும் பழைய வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் ஏன் observe பண்ணுகிறாய் (கைக்கொள்ளுகிறாய்) என்பது எனக்கு விளங்கவில்லை.

சி:—பழையவழக்கங்களில் தள்ளத்தக்கவைகளைத் தள்ளுதல் அவசியமே, ஆனால் அவைகளுள் பல கொள்ளத்தக்கவைகள் இருக்கின்றனவே அவைகளைக் கொள்வது ஒழுங்குதானே?

சு:—என்னமோ, சிவஞானம், நீ சொல்வத னுண்மை எனக்குத்தெரியவில்லை. நமது முன்னோர்களுடைய superstition கள் (குருட்டுநம்பிக்கைகள்) எல்லாம் மெய்யா யிருக்குமோ? இரங்கூனில் போன ஜனவரி

மாதம் ஒரு தமிழ்ப் புராணிகர் பிரசங்கம் பண்ணினர். நான் chance ஆக (எதிர்பாராமல்) அதைக் கேட்க நேர்ந்தது. அவர் சொன்னதில் இரண்டொன்று சொல்கிறேன் கேள்: சுடுகாட்டுச் சாம்பலில் புரண்டு கொண்டிருந்த ஒரு சொறிபிடித்தநாய் அங்கே கொளுத்துவதற்கு வைத்திருந்த ஒரு பிணத்தின் நெற்றியில் தன் கால்பட ஓடிவிட்டதாம். அந்தக் காலிலிருந்தசாம்பல் பிணத்தின் மேல்பட்ட பாக்கியத்தால் அந்த உடம்பை விட்டு நீங்கிய soul (ஆன்மா) மோட்சம் அடைந்ததாம். இதற்குப் ஒரு புராணத்திலிருந்து பாட்டும் quote பண்ணினர் (எடுத்துக் காட்டினர்). இதை யார் நம்பக்கூடும்? என்ன கொலைபாதகனாயிருந்தாலும் சரி, "சிவ சிவ" என்று சொல்லிவிட்டானானால் பரிசுத்தமாய் விடுவானாம். ஒரு ஆலயத்தைச்சுற்றிவந்தால் ஒரு கோடி புண்ணியம் உண்டாம். ஒரு தீர்த்தத்தில் முழுகிவிட்டால் தேகத்திலிருக்கும் அழுக்கோடு பண்ணிய பாவங்களெல்லாம் தீர்ந்து விடுமாம். நீ கழுத்தில் மாட்டிக்கொண்டிருக்கும் கொட்டைகளில் ஒன்றைத் தரித்துக்கொண்டாலே எத்தனையோ புண்ணியம் கைகூடி விடுமாம். அப்படியானால் நீ இது வரையில் பூசிய விபூதியையும் தரித்த ருத்திராட்சத்தையும் கணக்கிட்டால் பேல் பேலாகப் புண்ணியங்கள் சுவர்க்கததில் உன் credit இல் உனக்குச் சொந்தமாக இருக்கவேண்டும் புண்ணியந்தேட என்ன easy ஆன (இலகுவான) வழி ! சிவஞானம், என்மேல்கோபித்துக்கொள்ளாதே. எனக்கிதெல்லாம் கேட்டமுதல் சமயம் என்றால் வேம்பாயிருக்கிறது. இதை யெல்லாம் நம்புவது பயித்தியக்காரத்தனமென்றெண்ணுகிறேன். மற்ற religions (சமயங்கள்) கூட இந்த கதியில் தான் இருக்கின்றன.

சி:—நீ குறித்த கொள்கைகளை யெல்லாம் உனக்குத்தெரிந்த அருத்தத்தில் நானும் நம்பவில்லை. சைவ சமயமும் எனக்குத் தெரிந்தவளவில் நம்பும்படி சொல்லவில்லை. தேவாராதி திருமுறைகளிலாவது சித்தாந்த சாஸ்திரங்களிலாவது கேவலம் வெளிவேஷத்தினால் மாத்திரம் மோட்சம் நேரிற்கிடைத்து விடுமென்று பேசப்படவில்லை. சமயநூலாராய்ச்சி நன்றுசுவாய்க்கப்பெறாதவர்கள் தாம் இப்படிப்பட்ட விபரீதங்களை மெய்யென்று சொல்லுவர். குற்றம் பிறர்பாலிருக்க அதைச்சமயத்தின் மீதேற்றி நமது முன்னோர்களை இகழ்வது சரியல்ல.

சு:—இது என்ன? சமயம் சமயம் என்கிறாய். எந்த சமயத்தை எவன் கண்டான்? அவனவன் தன் தன் religion ே (சமயமே) மோட்சத்திற்கு வழிகாட்டுவது என்கிறான். இதில் யார் சொல்லை நம்புவது? இவர்கள் சொல்வதற் கெல்லாம் proof (சாக்ஷி) என்ன? கடவுள், கடவுள் என்கிறார்கள். அதையார் பார்த்தது? God, God என்று கிளிப்பிள்ளைபோ

லச் சொல்வதைத் தவிர வேறொன்றுங் காணேன். God, soul, (பதி, பசு) என்று எல்லாம் விசாரித்துத்திரிவது வீண் என்று நினைக்கிறேன். ஏதோ நம்மால் கூடிய மட்டும் பொய் சொல்லாமல், திருடாமல், பரோபகாரஞ் செய்து யோக்கியதையோடு வாழவேண்டும். இதற்குச் சமயம் என்னத்திற்கு? சாத்திரம் என்னத்திற்கு?

சி:—சுந்தரம்! நீ கேட்டகேள்விகளுக்கெல்லாம் சரியான பதில்களுண்டு. அவைகள் கிடக்கட்டும், 'யோக்கியமாய் வாழவேண்டும். பொய் சொல்லல் முதலிய குற்றங்கள் செய்யக்கூடாது' என்றாயே, அதைக்குறித்து யாராவது "அப்படி என் செய்யக் கூடாது"? என்று கேட்டால் நீ என்ன சொல்லுவாய்?

சு:—இதற்கு ஒரு காரணம்வேண்டுமா? நல்லவர்களாய் வாழ முயற்சி செய்வது natural தானே? (இயல்புதானே?)

சி:—மனிதப்பிறப்பையடைந்த நமக்கு அறிவென்பதொன்றுண்டு; அது திரிகரணங்களால் செய்யப்படும் ஒவ்வொருவேலைக்கும் காரணம் கேட்டுக்கொண்டேயிருக்கிறது. அதன் கேள்விகட்குப் பதில் சொல்லாது நடப்பது அறிவுடையோர் செய்கையல்ல. அநேகமாக 'இயற்கை' 'சுபாவம்' என்று சொல்லுவதெல்லாம் நம்முடைய அறிவின் குறைவையே காட்டுகிறது. கூடியவரையில் நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும், நம்பும் ஒவ்வொரு கொள்கைக்கும், போதுமான நியாயங்களிருக்கவேண்டும். இல்லாவிட்டால் நமக்குப் பகுத்தறிவு இருந்தும் இல்லாதது போலாகும் அல்லவா?

சு:—இருக்கட்டும், நாம் நல்லவர்களாய் நடக்க வேண்டுமென்பது உனக்கும் சம்மதந்தானே? அதற்கு நீ என்ன reasons (காரணங்கள்) கொடுப்பாய்?

சி:—என்னுடைய காரணங்கள் யாவும் சமயசம்பந்தமானவைகளாகவே இருக்கும். ஆன்மாக்கள் தங்களது முயற்சியாலும் இறைவனது திருவருளாலும் தமது பாசம் நீங்கப் பெற்று ஞானமடைந்து மோட்சம் சேர்வதற்கு நல்ல நடக்கை இன்றியமையாதது. மனத்தின் கண்ணும் மாசில்லாது தருமநெறியே நின்று புண்ணியங்களைச் செய்யவேண்டும். அதிலும் பிறந்து இறந்து உழலும் நாம் இந்தப் 'பொல்லாப் பெருங்கடலை நீந்திக்' கடவுளது திருவடியை அடையவேண்டுமாயின் சுயநலங்குறித்த அகப்பற்று புறப்பற்று என்னும் இரண்டுவித ஆசைகளையும் அடியோடு அறுக்கவேண்டும்.

"எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி யிரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"

என்று ஒரு ஞானிவேண்டியபடி அன்பை வளர்க்க வேண்டும். இப்பெரு நோக்கங்கள் நிறைவேறுதற்காகத்தான் நீ முன் குறித்தவைகளைப் போன்ற நற்குண நற்செய்கைகளை நாம் பெற வேண்டுமென்பது. இதுவரையில் நான் சொல்லிவந்ததில் ஒரு உண்மை உனக்குப்புலப்பட்டிருக்கலாம், அதாவது:—சமயத்தைத் தள்ளிவிட்டால்,

"நாம் ஏன் நல்லவர்களாய் வாழவேண்டும்" என்று கேட்டோர்க்கு, உளங்கொள மறுமொழி சொல்லமுடியாது; தருமவழியில் நிற்கவுமுடியாது என்பதாம்.

சு:—அப்பா நீசொல்வது எனக்கு clear ஆக (தெளிவாக) விளங்கவில்லை. ஆனாலும் கடைசியில் religion இல்லாவிட்டால் நல்லநடக்கையோடு வாழமுடியாதென்றாயே, அது எப்படி? சில Agnostics (ஒருவகை நாஸ்திகர்கள்) மிக யோக்கியர்களாயிருக்கக் காண்கிறோமே?

சி:—நண்பனே, உன் நினைவிற்குவரும் அந்த நாஸ்திகர்களது சரித்திரங்களை எல்லாம் ஆழ்ந்து ஆராய்ந்துபார். அவர்கள் வாயாலும் எழுத்தாலும் கடவுளில்லை என்று தாம் நம்புவதாகத் தெரிவித்தாலும், அவர்களுக்குத் தெரியாமலே அவர்கள் ஆஸ்திகர்களாகத்தானிருக்கின்றார்கள். கடவுள் இல்லை என்று மறுக்கு முகத்தாலேயே சமயவாதிகள் சொல்லும் கடவுளிலக்கணங்களை ஆராய்பவர்களாகிறார்கள். சமயசாஸ்திரங்களை ஓதுகிறார்கள். இவைகளின் முடிபு அவர்கள் மனதறிய ஒத்துக்கொள்ளாவிட்டாலும் இவைகளுடன் பழகுவதாலேயே இவர்கள் மனதும் செய்கையும் பூவொடுசேர்ந்த நார்போலப் பொலிவடைகின்றது. கடவுளைப்பற்றி மனிதர் பல ஆபாசமான எண்ணங்கொண்டுள்ளார்கள்; அவைகளை அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்த நாஸ்திகர்கள் பரிகசிக்கிறார்கள். அதனால் அவர்கள் கடவுளை நிராகரித்தவராகார். இந்த சூக்ஷமமான அனுபவ விஷயத்தை நீ ஓய்ந்த காலத்தில் நன்றாய் ஆராய்ந்துபார். உண்மை தோன்றலாம். எனக்கும் இப்படிப்பட்ட ஐயப்பாடுகள் எல்லாம் முன்பு எழுந்ததுண்டு. பிறகு என் அறிவு சற்றே வளர வளர, சமயச்சார்பு இன்றி உண்மையான நல்லொழுக்கம் கை கூடாது என்னும் நம்பிக்கை என் மனதில நன்றாய் வேறூன்றி விட்டது. என் அனுபவத்தில் இதனுண்மையை நாளுக்கு நாள் கண்டு வருகிறேன். இன்னும் இதைப்பற்றி விஸ்தாரமாகச்சொல்வது அநாவசியம்.

சு:—இவ்விதமான கருத்துகளெல்லாம் என் மனதில் இதுவரையில் பட்டதில்லை. ஆனாலும் எல்லா சமயங்களும் ஒரு கடவுள் உண்டு என்று நம்புபவை தானே? அப்படிக் கடவுளுண்டு என்பதற்குப் போதுமான evidence (நியாயம்) உண்டா?

சி:—ஆஸ்திக சமயங்களெல்லாம் கடவுள் ஒருவர் உண்டென்று தான்சொல்லுகின்றன. அறிவினளவால் நுனித்து ஆராய்ந்தாலும் கடவுள் உண்டென்று பல அனுமானங்களால் அறியலாம். நமது பெரியோர்களே இதற்கு வேண்டிய நியாயங்களை தடைவிடைகளோடு விரிவாய்ப் பல நூல்களில் எழுதியிருக்கின்றார்கள். நான் இவைகளைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை, சுருதியினாலும் யுக்தியினாலும் ஒரு பொருளின் இருப்பை நிச்சயிப்பதைவிட அனுபவத்தாலேயே அது உள்ளது என்று காட்டுதல் சிறப்பு. முன்பு நீ 'கடவுளையார் கண்டார்கள்' என்று கேட்டாய். உண்மையாகக் கடவுளைக் கண்டவர்களை உனக்குக் காட்டினால் இறைவன் ஒருவன் இருக்கிறானென ஒத்துக்கொள்வாயா?

சு:—அதற்குத்தடையில்லை. கல்வியில்வல்ல சிலர் தங்கள் விபரீத விசாரணையால் ஆகாயக் கோட்டை கட்டி நமது புலன்களுக்கு விஷயமாகிற உலகத்தை அடியோடு இல்லவே இல்லை. அது illusion (மித்தை) என்று சாதிக்கிறார்கள். அதுபோன்ற புரட்டுகள் தான் எனக்கு விளங்குவதில்லை. எந்த விஷயமானாலும் அநுபவத்துக்கு முரணாமல் அதனால் நிச்சயிக்கக் கூடியதாயிருந்தால் அதை உள்ள தென்று கொள்ள ஏன் பின் வாங்கவேண்டும்?

சி:—உண்மைதான், ஆனால் இன்னுமொரு விஷயத்தை மறக்காமலிருக்க வேண்டும்: நாமெல்லாம் ஒரே அளவான அறிவின் கூர்மையை உடையவர்களல்ல. நம்மநுபவங்களும் பலதிறத்தனவாகி முதிர்ச்சியினளவால் வேறுபட்டு நிற்கின்றன. ஆகையால், சடப்பொருள்களைப்பற்றியும் சித்துப்பொருள்களைப்பற்றியும் நமக்கெட்டாத பலவிஷயங்களை, நம்மினு முதிர்ந்த அறிவும் அநுபவமும் உடையோர் சொல்லுவராானல் அவைகளை நாம் மெய்யென்று கொள்ளவேண்டியிருக்கிறது. பெரியோர்சொல்லில் நம்பிக்கை வையாது ஒவ்வொரு விஷயத்தையும் நாமே சோதித்து அறிந்து பிறகே அதை உண்மை என்றுகொள்வோமென்பது முடியாத காரியம். தக்க மூதறிவாளர்களதுணையை நம்பி அவர் சொல்வழி நின்று பிறகு அவர்கள் சொல்லிய துண்மையோ அன்றோ என்று அநுபவத்தாலறிவதே முறைமை. Conservation of energy (பிரபஞ்சத்திலுள்ள சடசக்தியின் அளவு குறைதலும் வளர்தலும் இல்லை என்னும் கொள்கை), Law of Universal Gravitation (ஒவ்வொரு சடப்பொருளும் மற்றெல்லா சடப்பொருள்களையும் தன்னுடைய பருமனுக்கும் தனக்கும் உள்ள தூரத்திற்கும், ஏற்பத்தன் பால் இழுக்கின்றது என்னும் சித்தாந்தம்), The rotation of earth on its own exis round the sun (பூமி இரண்டுவித நடைகளோடு மிக்க வேகமாய் சூரியனை சுற்றிவருதல்), என்பது முதலிய எண்ணிறந்த உலகநூற்கொள்கைகளின் உண்மையை நாமே சோ

தித்தறியாமலே மெய்யென்று நம்புகிறோமல்லவா? அதுபோலவே நம்மியல்பையும் நமது இறைவனாகிய பரம்பொருளினது இயல்பையும், அறிய வேண்டில், அத்துறையில் அதிக தேர்ச்சியடைந்த ஞானிகள் சொல்லியவற்றை மெய்யென்று நம்பி அவர் காட்டிய நெறியைப் பின்பற்றுவது முறை என்று தெரிகிறது. எனக்கும் உனக்கும் கடவுளை நேரிற் காண முடியாமையினாலேயே கடவுள் இல்லை என்று முடிவு கட்டிவிடக்கூடாது. சுந்தரம், இது வரையில் கூறி வந்ததெல்லாம் உனக்கு உடம்பாடுதானா?

சு:—உடம்பாடுதான், ஆனால் ஒன்று சொல்ல வேண்டுகின்றேன்: பெரியோர்கள் போதனை என்று எதையாயினும் ஒன்றை நம்புவதற்கு முன்பு அதைச் சொன்ன பெரியோர் யாவர்? அவரவ்விஷயத்தைப் பற்றிப் பேசப்போதுமான ஞானமும் அநுபவமும் உடையவர்தானா? அது அவர் சொன்னது தான் என்று கொள்ள இடமுண்டா? அவர் என்ன எண்ணத்தோடு அதைச் சொன்னார்? என்றெல்லாம் யோசித்த பிறகே பெரியோர் வார்த்தை என்பதில் நம்பிக்கை வைக்கலாம். முக்கியமாய் நம்தேசத்தோர் இதை நன்றாய்க் கவனிக்கவேண்டும். “பாரப்பா”, “கேளப்பா” என்று தூங்கி வழிகிற கோழை வைத்தியப் பாட்டுகளை எல்லாம் அகஸ்தியர் வாக்காக எத்தனை பேர் கொள்கிறார்கள். இவ்விதமாக நூலைப்புரட்டுதல் பலவிடங்களில் உண்டு என்று கேள்விப்படுகின்றேன். இன்னும் சிலர் மூக்கரையன் சீஷர்கள்போலத் தாம் கெட்டது போலப் பிறரையும் கெடுக்க முயல்வதுங் கூடுமல்லவா? ஆகையால் இதையெல்லாம் சோதித்த பிறகே பெரியோர் வார்த்தை என்பதை அங்கீகரிக்க வேண்டும் என்று என்புத்திக்குப் புலப்படுகிறது,

சி:—நீ இப்போது சொல்லியது முற்றிலும் உண்மையே. இத்தகைய நுண்ணறிவு உனக்கு இயல்பாய் இருப்பது பற்றி மிகச் சந்தோஷம். நீ காட்டிய வழி எல்லாம் சோதித்த பிறகும் உண்மையில் சான்றோர்களே என்று சிலர் ஏற்பட்டால் அவர்கள் காட்டும் நெறியைப் பின்பற்ற தடையில்லையே?

சு:—இல்லை,

சி:—நாவுக்கரசர், மாணிக்கவாசகர், திருமூலர், காரைக்காலம்மையார், பட்டினத்தடிகள், சேக்கிழார், மெய்கண்டார், அருணகிரிநாதர், தாயுமானார், நீலகண்டர், சைதன்யர், நம்மாழ்வார். இயேசுநாதர் ஸெயிண்டு, பால், ஸெயிண்டு பிரான்ஸிஸ் ஆப் அஸிஸி முதலிய பெரியோர்களும் இவர்கள் போதனையைப் பின் பற்றி நடந்த ஆயிரக் கணக்கான சான்றோர்களும் ஆன்மாக்களாகிய நமக்குத் தலைமைவிதித்து ஒரு பரம் பொருள் இருக்கின்றது என்றும் அதை அடைதற்குரிய வழிகளைத்தேடும் பொருட்டே

நாம் மனிதராய்ப் பிறந்திருக்கிறோமென்றும் ஒருங்கே கட்டுரைப்பார்களானால் அவர்கள் சொல்லுகிறதைக் கொள்ளுவதா அல்லது தள்ளுவதா? யோசித்துச்சொல். இவர்களிற் சிலரது சரித்திரங்களாவது உனக்குத் தெரிந்திருக்கலாம். அவர்களைப் பொய்யர்களென்றாவது, வஞ்சகர்களென்றாவது, நம்போலியரை விடச்சமய அறிவு அநுபவங்களில் மிக முதிர்ந்தவர்களல்லர் என்றாவது, ஈசுவர ஞானம் சிறிதேனும் பெறாதவர்கள் என்றாவது ஒதுக்க நியாய முண்டா? இப்போது சில பெரியோர்களையே நான் குறித்தேன். இன்னும் எத்தனையோ பேர்கள் இருந்தார்கள் இன்னும் இருக்கிறார்கள்.

சு:—(சிறிதுநேரம் மௌனமாயிருந்தபிறகு) சிவஞானம், இது வரையில் மனதை இவ்வழிகளில் செலுத்தினதில்லை. நீ சொல்பவைகள் புதியவையாய்க் காணப்பட்டாலும் உண்மை என்றே தோன்றுகின்றன. இப்பெரியோர்களை வஞ்சகர் அறிவிலிகள் சாமானியார் என்றுசொல்ல என்னுவெழாது. ஏதோ Comfortable ஆய் (சுகமாக உண்டு உடுத்து உறங்கி) உலகில் வாழவேண்டு மென்னும் ஒரே நோக்கத்தோடு பொருள்தேடி சமயத்தைப்பற்றிக் கவலையின்றிக் காலங் கழித்த எனக்கு இப்பெரிய விஷயங்களைப்பற்றிப்பேச உரிமையேது? கடவுள் கிருபை பெற்ற பெரியோர்கள் தன்மையை சற்றும் தெரிந்து கொள்ளாமலே சாமானியர் செய்யும் குற்றங்களை அப்பெரியோர்மேல் சுமத்திச் சமய நிந்தனை சாத்திர நிந்தனைசெய்தேன். மேற்றிசை நாகரிகம் சர்வோத் கிருஷ்டமான தென்று உலகவழியிலேயே என்புத்தியைச் செலுத்திப்போது போக்கினேன். இப்படிச் சாலநாள் போககினதை நினைக்க மனம் திடுக்கிடுகின்றது. இனியாயினும் நன்னெறி கடைப்பிடிக்க முயல்கிறேன். என்னுயிர்த் தோழனாகிய நீயே எனக்குக் குருவாகவு மிருந்து உன்னாலியன்ற மட்டும் எனக்குதவி செய்ய வேண்டும்.

சி:—என்மனதிற் கிசைந்த அன்பனே! நாயினுங் கடையேனாகிய என்னால் என்ன ஆகும். எல்லாம் திருவருட்செயல். உன்மன மிவ்வளவு விரைவாகச் செம்மைநல மறிந்து மேலெத்தனாவினாலும் உனது அதிதீவிர பக்குவத்தினாலுமேயாம். "உடுக்கை இழந்தவன் கைபோலவாங்கே இடுக்கண் களைவதா நட்பு" என்றார் திருவள்ளுவர். சிற்றறிவும் சிறுதொழிலுமுடைய நாயேனை நீ நன்னெறி சார்வதற்குக் கருவி யாகத்திருவருள் எப்படி இயக்குவித்தாலும் எனக்கு உவப்பே. என்னால் உனக்கு ஆகக் கூடியது என்ன?

சு:—பெரியோர்களெல்லாம் ஒரு முகமாகப் போற்றுகின்ற கடவுள் எப்படிப் பட்டவர், அவரைப்பற்றி அவர்கள் என்ன சொல்லுகின்றார்கள்? விளக்கமாக அறிவிக்க வேண்டும்.

சி:—கடவுள் இப்படிப்பட்டவர் தான் என்று வரையறுத்துச் சொல்லமுடியாது, ஞானிகள் கடவுளை,

"சொல்லுக் கடங்காச் சுகப்பொருள்"

"உரை மனமிறந்து நின்ற ஒருவன்"

"மாற்ற மனங்கழிய நின்ற மறையோன்"

"இன்ன தன்மைய னென்றறியாச் சிவன்",

என்பன போன்ற எண்ணிறந்த சொற்றொடர்களால் துதித்திருக்கின்றார்கள். ஆனால் அவர்களே..........................................................

(இன்னும் வரும்.)

S. சச்சிதானந்தம் பிள்ளை.

---

## திருக்குறள் மாட்சி.

(முன்தொடர்பு தொகுதி 1, பகுதி 7, 8, பக்கம் 216.)

இவ்வாறு கூறிய மனோநாசம், தத்துவஞான மிரண்டும் அவா நீங்கினவிடத்தன்றி சித்தியாமையின் வாசனாக்ஷயமென்னும் அவாவறுத்த லதிகாரத்தை யதன்பின்வைத்தார். வாசனை யென்பது பொருள்களைக் கண்டபொழுது அதனைப் பற்றிச் செல்வதாகிய ஆசை உள்ளத்தில் வசித்திருப்பது. வசித்திருக்குங்கால் அவாவென்றும், பொருள்களைப் பற்றிச் செல்லுங்கால் ஆசையென்றும் பெயர்பெறும். உள்ளத்திற் றங்கியிருக்கு மவா அறாதவழி, ஆசையறாது. இவ்வவா அறுதலுஞ் சித்தித்தபொழுதுதான் முத்தி சித்திக்கும். இதுபற்றியே இவ்வதிகாரத்தில் "ஆராவியற்கை யவாநீப்பி னந்நிலையே பேராவியற்கை தரும்" எனப்பத்தாவது பாட்டருளிச் செய்தார். இப்பாட்டுக்கு உரையாசிரியர் பரிமேலழகர் "இதனால் வீடாவது இது வென்பதூஉம் அஃது அவாவறுத்தார்க்கு அப்பொழுதேயுளதா மென்பதூஉங் கூறப்பட்டன." என்று கூறினர். அன்றியும் உண்மை

ஞானத்தை யடைந்தார்க்கும் பிராரத்தம் உள்ளளவும் தேகமிரு க்கும். அது பற்றுக்கோடாக, விருப்பு வெறுப்புக்கள் உளவாம். அவற்றைத் தோன்றுந்தோறுந் தோன்றுந்தோறுங் கெடுக்க வேண்டும். இதுபற்றியே மெய்யுணர்தல் என்னும் அதிகாரத் தின் பின் அவாவறுத்தல் என்னும் அதிகாரம் வைக்கப்பட்ட தென்றலும், ஒன்று. இவ்வாறு துறவறத்தில் ஞானபாதம் கூறிய பின்னர், ஞானத்தால் வீடெய்திய முத்தரும் பிராரத்த த்தை அநுபவித்தே தீரவேண்டுமென்பது தோன்றவும், இது காறுங் கூறப்பட்ட இல்லற ஒழுக்கம் துறவற ஒழுக்கங்களாகிய இரண்டும் இனிக்கூறப்படும் பொருளின்பங்கள் இரண்டும் பிரா ரத்தத்தினாலேயே சித்திக்குமென்பது தோன்றவும், பிராரத்த மும் வினையின் பயனைப் பிறழாமல் அனுபவிக்கச் செய்தலின் அறமேயென்பது தோன்றவும், ஞானத்தின் பின்னாகவும், அறம் பொருளின்பங்களின் நடுவாகவும், அறத்துப்பாலுடன் ஒன்றாக வைத்திறுதியாகவும், ஊழ் என்னும் அதிகாரங்கூறினர். அன் றியும் பொருள் அடைவதற்குரிய பங்க ஊழும், வீடடைவதற் குரிய விடுதி ஊழும் என ஊழ் இருதிறப்படுமாதலின், அக்க ருத்துத் தோன்ற ஞானத்துக்கும் பொருளுக்கும் நடுவில் ஊழ் என்னும் அதிகாரத்தை வைத்தாரென்றலு மொன்று.

இவ்வாறு அறத்துப்பால் கூறியபின்னர், இவ்வறத்தின் வழிப்படுவன்வாயும், அறமும், அதனால் உண்டாம் இன்பமும் எய்துதற்குத் துணையாயுமுள்ள பொருட்பால் அறத்துக்குப் பின்னும், இன்பத்துக்கு முன்னுமாக எழுபது அதிகாரங்களால் அரசன்மேல் வைத்துக் கூறினர். தலைமைபற்றி அரசன்மேல் வைத்துக் கூறினாரேனும், ஏனைய ஒவ்வொருவருக்கும் உரி யதேயாம்.

இங்ஙனம் பொருட்பால் கூறியபின்னர், இல்லறந் துறவற மென்னுமிரண்டின் பயனாகிய இன்பத்துப்பால் இருபத்தைந்து அதிகாரங்களால் கூறி நூலை முடித்தனர். இன்பத்துப்பாலில் இல்லறத்தின் பயனாகிய மகளிரொடு கூடி யனுபவிக்குஞ் சிற்றி ன்பம் ஒன்றனையே கூறினாரென்பர் ஒரு சாரார். அது பொருந் தாது. என்னை? துறவறத்தின் பயன் வேறு கூறாமையின் என்க.

அற்றன்று: துறவறத்தின் பயன் சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமைத்தாதலின் அதனைக் கூறாது இல்லறத்தின் பயனாகிய இன்பம் ஒன்றனையே இப்பாலிற் கூறினாரென்றல் அமையாதோ வெனின், அமையாது. என்னை? துறவறத்தின் பயனாகிய பேரின்பம் சிந்தையுமொழியுஞ் செல்லா நிலைமைத்தாதலின், இல்லறத்தின் பயனாகிய இன்பத்தின் உள்ளுறை பொருளாய்க் கூறினாராதலி னென்க.

இவ்வாறே திருக்கோவையாரில் சிற்றின்பத்துப் பாலில் வைத்தே பேரின்பத்தை ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமானும், அருளிச்செய்தனர். சிற்றின்பத்தில் தலைமகனும், தலைமகளும் போல பேரின்பத்திலுமுண்டு. அதுவும் ஆண்டானடிமைத் திறம்பற்றியும், அனுபவிப்பான் அனுபவிக்கப்படுந் திறம்பற்றியும் இருவகைப்படும். ஆண்டானடிமைத் திறத்தில் இறைவன் நாயகன், உயிர் நாயகி; அனுபவிப்பான் அனுபவிக்கப்படும் திறம்பற்றி ஆனந்தம் நாயகி, உயிர் நாயகன், அருள் தோழி. இவ்வின்பத்துப்பாலை களவியல் கற்பியல் என இரண்டு இயல்களாகப் பிரித்துக் கூறினர். களவியல் என்றது திருட்டுப் புணர்ச்சியையன்று. அது கற்பியலில் அறம்பொருளின்பங்களின் பொருட்டுத் தலைமகன் பிரிந்தபொழுது, தான் அனுபவித்த இன்பத்தை நோக்கி பிரிதொரு தலைமகனைக்கூடி அனுபவிக்க எண்ணாது சென்றவனையே நாடிவருந்தினாளெனக் கூறியதனாலேயே இனிதுவிளங்கும். களவு என்னும் சொற்குப்பொருள் நாயகன்நாயகி கூடியனுபவிக்கும் இன்பம் பிறர் அறியாமைபற்றியும் அவ்வின்பம் இத்துணைத்தென பிறர்க்குச் சொல்ல முடியாமை பற்றியுமேயாம். இவ்வின்பத்துப் பாலில் இன்பம் அனுபவிப்பதாகிய களவியல் ஏழு அதிகாரத்தானும் அறம், பொருள், இன்பங்களின் பொருட்டு தலைமகன் பிரிந்தபொழுது, அப்பிரிவாற்றாமையாகிய கற்பியலை பதினெட்டு அதிகாரத்தானுங் கூறினர்.

இவ்விரு இயல்களைப் பேரின்பப் பொருள்களாகக் கொள்ளுமிடத்து களவியல் பரமுத்தி. கற்பியல் சீவன்முத்தி. களவியலில் அனுபவிப்பான் அனுபவிக்கப்படுந்திறம். கற்பியலில் ஆண்டானடிமைத்திறம். களவியல் பரமுத்தியென்பதை "நலம்பு

லைந்துரைத்தல்'' என்னும் அதிகாரத்தில் ''அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்; செறிதோறுஞ் சேயிழை மாட்டு'' என்னும் 10வது பாட்டால் இன்பானுபவத்தில் அனுபவிக்குந் தோறும் எல்லையின்றி மேலும் மேலும் விருப்பம் உண்டாகுமென்ற தனாலறிக. அன்றியும் இப்பாட்டுக்குக் கூறியமுடிவுரையில் ''இப் புணர்ச்சிமகிழ்தல் தலைமகட்கு முண்டேனும் அவன் மாட்டுக் குறிப்பானிகழ்வதல்லது கூற்றானிகழாமையறிக'' என்றதனால் உயிர் தலைமகளென்றும் இறைவன் தலைவியென்றும் முன்னர்க் கூறியதை வலியுறுத்தும். உயிர்தத்துவ சோதனை செய்தவிடத்து, தலைவனையும் தன்னையும் தலைவனருளால் அறிந்து தலைவனில் அடங்கி இன்புறுதலாகிய பரமுத்தி முதற்கண்ணதாகலின், அதனைக் களவியலென்னும் பேரால் முன்னர் வைத்தார்.

இங்ஙனம் முத்தியடைந்த உயிர் பிராரத்வ அனுபவத்தின் பொருட்டு அந்நிலையில் நின்று நீங்கியபொழுது தலைமகனைப் பிரிந்த தலைவி பிறிதொருவனைக்கூடி அனுபவிக்க நினையாது அவனையே நாடியிருப்பதுபோல வினைகாரணமாகப்பற்றிய விடயங்களில் அழுந்தாது அகமுகத்தில் அனுபவித்த பேரின்பத்தையே நாடி நிற்றலால் சீவன்முத்தி யெனப்பேர்பெறும். இந்நிலையில் உயிர் தலைவி, இறைவன் தலைவன். இதனை ''அறிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும் பிரிவோரிடத்துண்மை யான்'' என்னும்பிறிவாற்றாமை அதிகாரத்து 3-வது பாட்டால்தெளிக. பரமுத்தியில் அருள் தோழியாயிருந்து தன் ஜாதியாகிய சிவானந்தமென்னும் தலைமகளை உயிராகிய நாயகனுக்குக் கூட்டுவிக்கும். சீவன் முத்தியில் உயிர் சிவமாந்தன்மை யெய்தப் பெற்றமையால் ஆண்டான் அடிமைத் திறம்பற்றி தலைவியாகி நிற்கு முயிரை அருளாகியதோழி தலைமகனாகிய இறைவனோடு கூட்டுவிக்கும். இவ்வாறு அருள் என்றும் தோழியாயிருந்து பரமுத்தியில் இறைவனை ஆன்மாவிலும், ஜீவன் முத்தியில் ஆன்மாவை இறைவனிலும் சேர்ப்பிக்குமென்க. நிற்க.

---

## முடிபுரை.

இதுகாறும் கூறியவாற்றால் ஆன்மாக்கள் அடையவேண்டியபயன் அறம், பொருள், இன்பம், வீடு என்று நான்காமென்பதூஉம், அவற்றைச் செயற்கை யறிவாகிய நூலறிவால் பெறவேண்டு மென்பதூஉம், இதுபற்றியே வேதாகமங்களை இறைவன் அருளிச் செய்தானென்பதூஉம், அவற்றையாராயும் வலிமையில்லாரும் உய்ய வெண்ணி அவற்றின் பொருள்களைத் திரட்டி நூல்களாக்கி பெரியோர் சிலர் தந்தனரென்பதூஉம், அவை நான்கு பயனும் ஒருசேரத்தொகுத்துக் கூறுமையின் அவற்றைத் தொகுத்து தமிழில் குறட்பாவில் திருவள்ளுவர் ஒரு நூலருளிச் செய்தாரென்பதூஉம், வள்ளுவர் என்பது நான்குபயனுந் தொகுத்துத் தந்தமையின் வள் என்னும் பகுதியடியாய்ப் பிறந்த காரணப் பெயரென்பதூஉம், பாவின் பெயரே நூற்குப் பெயராய் வழங்குதலின் முன்னர் இப்பாவால் நூலில்லையென ஊகிக்கப்படுமென்பதூஉம், இந்நூலியற்றிய காலம் கடைச் சங்கக்காலமென்பதூஉம், அச்சங்கத்தில் அரங்கேற்றவரு நூற்குறைகண்டு மனம் பொறுதவராய் தலையிற் குத்தி சீவைத்துள்ள காரணத்தாற் பெயர்பெற்ற சீத்தலைச்சாத்தனார் இக்குறளைக் கேட்டுத் தலைக்குத்து நீங்கினாரென்பதூஉம், இந்நூலில் நாற்பாலுமடங்கியிருக்கின்றதென்பது பரிமேமேலழகருரையானும் சிறப்புப் பாயிரத்தானுந் துணியப்படு மென்பதூஉம், முப்பாலென்று கூறவது நாற்பாலும் முப்பாலுளடங்கு மென்றல் பற்றியே யாமென்பதூஉம், இந்நூல் 133 அதிகாரங்களையுடைய தென்பதூஉம், முதனான்கதிகாரமும் பாயிரமென்பதூஉம், அவற்றுள் முதலதிகாரத்து முதற் செய்யுள் கடவுள்வாழ்த்தென்பதூஉம், ஏனைய ஒன்பது செய்யுளும் பயனென்பதூஉம், இரண்டாவது வான் சிறப்பு சம்பந்த மென்பதூஉம், மூன்றாவது நீத்தார் பெருமை அதிகாரியென்பதூஉம், நான்காவது அறன் வலியுறுத்தல் நுதலிய பொருளென்பதூஉம், பாயிரத்தை வட்நூலார் அனுபந்த சதுட்டய மென்பரென்பதூஉம், இப்பாயிரம் நூலாசிரியரே சொல்லவுந் தக்கதென்பதூஉம், வாழ்த்து, வணக்கம், பொரு

ளியைபுரைதல், என்னும் மூவகை வாழ்த்துள் முதற்பாட்டாற்கூறிய வாழ்த்து பொருளியை புரைத்தலாமென்பதூஉம், பாயிரஞ்சொல்லி முடித்து ஆன்மாக்களுக்கு இந்திரியம், மனம், அறிவு மூன்றும் முறையே அடங்கவேண்டுமாதலின் புறப்பற்றொழிதலாகிய இந்திரிய நிக்கிரகத்தின் பொருட்டு அடுத்த இருபததிகாரத்தில் கூறப்பட்டது இல்லறமென்பதூஉம், இதனை அடுத்து துறவறத்தை விரதம், ஞானம் என இரண்டியல்களாக் கூறினரென்பதூஉம், விரதம் மனமடங்கச் செய்யுமென்பதூஉம், ஞானம் மனோநாசம், தத்துவஞானம், வாசனாக்ஷயமெனமுத்திறப்பட்டு உண்மை யுணரச் செய்யுமென்பதூஉம், ஞானிக்கும் ஊழ் உண்டென்பதற்கும் பொருளின்பங்கள் ஊழாலா மென்பதற்கும் அடுத்து ஊழ்கூறினரென்பதூஉம், இதனடுத்து பொருட்பாலும், இன்பத்துப்பாலும் முறையே கூறினரென்பதூஉம், இன்பத்துப்பால் பேரின்பத்தையுங் குறிக்குமென்பதூஉம், திருக்கோவையாரே இதற்குச் சான்றென்பதூஉம், பேரின்பத்தில் ஆண்டானடிமைத்திறம் பற்றி இறைவன் நாயகன் உயிர் நாயகியும், அனுபவிப்பான் அனுபவிக்கப்படுந்திறம்பற்றி உயிர் நாயகன், ஆனந்தம் நாயகியுமாமென்பதூஉம், இப்பாலுட் களவியல், பரமுத்தி, கற்பியல், சிவன்முத்தியென்பதூஉம், முன்னையது அனுபவிப்பான் அனுபவிக்கப்படுந்திறம், பின்னையது ஆண்டானடிமைத்திற மென்பதூஉம், இவ்வாறு கூறி நூலை முடித்தனரென்பதூஉம் பிறவுமாம். அறிஞர் குணநாடிக் குற்றமுநாடி அவற்றுண் மிகைநாடி மிக்க கொள்வாராக.

பொ. மு. முத்தையபிள்ளை.

# அத்வைதம்

## சைவ சித்தாந்தத்தின்படி.

சைவசித்தாந்தத்துக்கு ஒப்பாமுடிந்தவாறு கடவுளுடைய சொரூபத்தைப் பற்றி "The New Reformer" ("நவமான சீர்திருத்தம்") என்ற பெயரிய பத்திரிகைக்கு யாம் செய்த விஷயதானமொன்றினில் யாம் விரிவாக எழுதியிருந்தோம். இப்போதும் அத்வைத விஷயத்தை விளக்குவான் அமோகமாக இங்கே எழுதுவதாகச் சங்கல்பிக்கின்றோம். ஆனால் இங்கே "அத்வைத சித்தாந்தம்" என்று குறிப்பிடப்பட்டது சித்தாந்த நூலாசிரியர்கள் போக்கைப் பின்பற்றிய தொன்றென் றுணர்க. இந்தியநாட்டுத் தத்வஞான விசாரணையை மேற்கொண்ட படிப்பாளிகள் யாவரையும் அன்பும் சிரத்தையுடனும் யாம் கூறுமவற்றைக் கவனிக்கும்படி பிரார்த்திக்கலாயினோம். இந்தத் தத்வஞானம் நாளடைவில் அதிகமாகவும் தெளிவாகவும் விளங்கக் கூடிய தொன்றாதலினால் எல்லா மதஸ்தர்களுடைய மனத்தையும் கவர்ந்து எல்லோருக்கும் மனோற்சாகத்தையும் பெரு நம்பிக்கையையும் இது விளைவிக்கக் கூடியதொன்றேயாம் உறுதியாக நம்பியிருக்கின்றோம். யாம் முன்னம் எழுதிய வியாசத்தில் சுட்டிக்காண்பித்த பிரகாரமே இந்தச் சிறந்த ஞானம் உலகத்தார் முன்பாகச் சுவல்பகாலத்திற் குள்ளாக, பிரகாசிக்கப் பட்டதென்றறிக. இதை—இந்த அரும்பெரும் விளக்கை ஏற்றியவர்கள்—இதை ஒரு கூடையைக் கவிழ்த்து உலகமறியாமல் ஒரு சிறு மூலையில் வைத்தவர்களல்லர். இனிமேல் வருங் காலமெல்லாம் இந்தத் தீபத்தின் அற்புத பிரகாச காலமேயாகி; அதி உன்னதமான பர்வதத்தின் சிகரத்தினின்றும் பிரகாசிக்கும் என்று நம்புகிறோம்.

முதற்கண் யாம் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டுக் காண்பிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். "அத்வைதம்" என்ற தனி சப்தம் தங்களது அருமையான தத்வஞானத்தை விளக்குவான் சித்

தாந்த நூலாசிரியர்க ளெல்லோராலும் உபயோகிக்கப்பட்டு வந்து ள்ளது. சித்தாந்த சாஸ்திரங்களுள் "விசிஷ்டாத்வைதம்" என்ற பிரயோகமானது எந்த இடத்திலும் காணப்படவில்லை. முதல் முதல் இந்தத் தத்வஞானத்தைத் தரிசிக்கும் பாக்கியத்தைப்பெ ற்ற சில புண்ணியர் உடனே இதை "விசிஷ்டாத்வைதம்" என்று முன்பின் யோசியாமல் கூறிக் களியாட்டயாநின்றனர். ஆனால் சைவ சித்தாந்திக ளெல்லோருமே தங்களைத் தாங்களே கண்டிப் பாக "அத்வைதிகள்" என்றே அழைத்திருக்கிறார்கள். இதை யாழ்ந்து கவனிக்க.

ஸ்ரீ "சிவஞானபோதம்" இரண்டாவது சூத்திரத்தின் வார் த்திகவுரையில் "ஸ்ரீ மெய்கண்டதேவர்" "அத்வைதம்" என்ற பதத்தை யுபயோகித்திருக்கின்றனர் கண்டீர்! அந்த அவசரம் அடியில் வருமாறு காண்க.

"அத்துவிதமென்ற சொல்லே அந்நிய
நாத்தியை யுணர்த்துமா யிட்டு"

அந்தத் தொடர்ந்தே அவர்தம் "அத்வைத" சித்தாந்தத்தை அருமை பெருமையாக விளக்குவான் புக்கார்.
மற்றோரவசரத்திலும், கீழே உதகரித்தபடி,

"அத்துவிதமாதல் அகண்டமுமதைவமே
அத்துவிதியன்பாற் றெழு"

அவர் தமது "அபிமதத்தை" (System) "அத்வைதம்" என்றே கூறலாயினர். அதன்றியும், அவரே, தமது சீடவர்க் கங்களையும் "அத்வைதிகள்" என்றே அழைக்கலாயினர்.

ஸ்ரீ உமாபதி சிவாசாரிய சுவாமிகள் "சிவப்பிரகாசம்" என்ற புண்ணிய நூலின் மேலே யுதகரிக்கப் பெறும் முகவுரைப்பாட்டில் அதையே "அத்வைத" மென்ற சொற் பிரயோகத்தையே யெடுத் தாண்டிருக்கின்றனர்.

"புறச்சமயத்தவர்க்கிருளா யகச்சமயத்தொளியாய்
புகலளவைக்களவாகிப் பொற்பணிபோலபேதப்
பிறப்பிலதாயிருள்வெளிபோற் பேதமுஞ்சொற்பொருள்
போற் பேதாபேதமுமின்றிப் பெருநூல்சொன்ன [போற்

அறத்திறனல்வினைவதா யுடலுயிர்க்கண்ணருக்கன்
அறிவொளிபோற்பிரிவறு மத்துவிதமாகுஞ்
சிறப்பினதாய்வேதாந்தத் தெளிவாஞ்சைவ
சித்தாந்தத்திறனிங்குத் தெரிக்கலுற்றாம்.''

ஸ்ரீதாயுமான வானவ பிரபுவள்ளல் "அத்வைத" மென்றவிந்த வரும் சப்தத்தைத் தாராளமாக ஆங்காங்கு முபயோகிக்க லாயினர் அவரது பரமகுரு ஸ்ரீ மெய்கண்ட நாதனைப் பாடியபோது அடியிற் கண்டபடி துதிப்பாராயினர்.

"பொய்கண்டார் காணுப்புனிதமா மத்துவித
மெய்கண்ட நாதனடி மேவுநா ளென்னுளோ?"

பிறிதொரு பாவில் பிரபு தாயுமானர் இந்த புண்ணிய மொழியை மறுபடியும் இரண்டுமுறைப் பூரித் துபயோகித்ததைக் காண்மின்! இந்த சப்தத்தின் அர்த்த புஷ்டியை விளக்கியும், இதற்குத் திருஷ்டாந்தம் தேடியும், கூறிய அவசரம் அது. இந்த விஷயத்தை யாமும் மேலே விரிவாக விசாரித்து முடிவு செய்வோ மென்பது நிச்சயம்.

"ஆணவத் தோடத்து விதமானபடி மெய்ஞ்ஞானத்
தாணு விளேடத்து விதமாகு நாளென்னுளோ?"

அந்தப் பதத்தையே மீண்டும் விசாரிக்கப் புகுவான் அடியிற் கண்ட வேதாக மந்திரங்களிலும் உபநிடத மந்திரங்களிலும், இன்னும் சிலவிடங்களிலும் அந்தப் பதம் காணப்படுகின்றது.

"ஏக ஏவ ருத்ரோ நத்விதீயாயதஸ்தே"

(யஜுர் வேதம் 1-8-6)

"ஏகோஹி ருத்ரோ நத்விதீயாயதஸ்தே"

(ஸ்வேதாஸ் உபநிஷத், 3-2)

"ஏகமேவாத் விதீயம்" சாந்தோக்யவுபநிஷத்

(6-2-1)

"சாந்தம் சிவம் அத்வைதம் சதுர்த்தம் ஆத்மா"

(மாண்டூக்ய வுபநிஷத் 7)

"அமாத்ராஸ் சாதுர்தவ்ய வகாரிக பிரபஞ்சோப
சமஸ் சிவோத்வை தவேவ"

அகண்டாகாரமான நான்காவது பதார்த்தமானது ஒருவராலும் உணரக் கூடாத தன்மைத்தாயுள்ளது, அதைக் கடந்து அப்புறம் செல்வது யாவராலும் முடியாத காரியமாயுள்ளது சிவாத்வைதம். (மாண்டூக்ய வுபநிஷத் 12)

முதலிரண்டு வாக்கியங்களும் இந்த வார்த்தையை யிதன் பிராகிருத ரூபமாகவே வெளிப்படுத்தியுள்ளன. அந்த ரூபமோ! "நத்விதீயம்" என்பதே இப்போது உபயோகத்திலிருக்கும் வார்த்தையோ?" "ந" என்ற முதல் அட்சர நீக்கத்தினால் கிடைக்கப் பட்டுள்ளது. "ந" என்றது எதிர் மறைப்பொருளில் முதற் பகுதியாக முடிந்தது. அதனால் இந்த வார்த்தையின் பொருள் என்னவென்று விசாரித்தால் இரண்டில்லை, இரண்டல்ல" எனவாகும் மேற் காட்டிய வாக்கியங்களில், சந்தர்ப்பங்களை நோக்கின் பல்வேறுபட்ட மத ஆசாரியர்களும் அந்வயித்துக் கூறும்படியான தத்வஞானார்த் தங்களுக்கு அவையிடந் தரவே மாட்டா வென்க. அது சொல்ல வந்ததெல்லாங் கூடிப் பிரஸ்தாப "புருஷனை" விட வேறு அந்நியமான யாதொரு புருஷனும் கிடையவே கிடையா தென்பதுதான் அதன் அபிப்பிராயம். முதற்கண் உதகரித்த வாக்கியத்தில், ஒரு கடவுள் தான் உண்டு. இரண்டாவது கடவுள் இல்லை யென்று அது கூறியது. இது எப்படியிருந்த போதிலும், பலமதங்களினும் கூறிப் போந்த பிரயோக உபயோகத்தைக் குறித்து யாம் இப்பொழுது விசாரணை மேற்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

எதிர்மறை முதலசைக்கு—அதாவது "ந" என்ற அட்சரத்துக்கு பல அர்த்தங்கள் கூறுகின்றன. (1) இன்மை அல்லது அபாவம், இது எதிர் மறையர்த்தங் கொண்ட அவசரம். (2) அன்மை அல்லது சாதிருசியம். (3) மறுதலை அல்லது விரோதம்—சம்ஸ்கிருத பாஷையிலும், இங்கிலீஷ் பாஷையிலும், ஒரேவார்த்தை முதற்கண் பேசிய இரண்டு அர்த்தங்களையும் காண்பிக்கும்படி உபயோகப்படுகின்றன. ஆனால் தமிழ்ப் பாஷையிலோ நமக்கு இரண்டு வேறு வேறு வார்த்தைகள் கிடைத்துள்ளன. அவை "இல்லை" "அல்லை" யென்ற இரண்டு வார்த்தைகளே "அத்வைதம்" என்ற வார்த்தையில் முதல் அர்த்தத்தை

நாம் சமப்பித்துப் பார்ப்போமானால், இரண்டில் யாதானுமொன்
றேனும், அல்லது இரண்டுமேனும் "இல்லவேயில்லை" யென்று
சொல்லவேண்டி வரும். மேலும் இரண்டிலொன் தானுண்டெ
ன்றேனும், அல்லது இரண்டுமில்லை யென்றேனும் முடிவுசெ
ல்லவேண்டி வரும். ஸ்ரீசிவஞான சுவாமிகள் நமக்குக் குறிப்பி
டுக்காண்பித்தபடி இதரமத ஸ்தாபனர்களாகிய ஆசார்யர்கள் இந்த
"அத்வைதம்" என்ற சப்தத்தை, "ஒன்று" என்ற அதன் 'அபாவ'
அர்த்தத்தில் எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். சாதிருசிய அர்
த்தத்தில் அதை யுபயோகிப்போமானால், அது "வேறு அல்லாத"
அல்லது "இரண்டற்ற" என்ற அர்த்த புஷ்டியைத் தருமென்க.
இந்த அர்த்தத்தை குறள்விளக்கியும் திருஷ்டாந்தித்தும் கூறுகி
ன்றது.

திருக்குறள் 86-வது அதிபாயம் முதல் குறளை தரிசனஞ்செய்க

"பொருள் அல்லவற்றைப் பொருளென்றுணரும்
மருளானு மாணப்பிறப்பு"

இங்கே பிரயோகிக்கப் பட்டுள்ள வார்த்தை "அல்ல" என்
பதே. அதனர்த்தம் தான் என்ன? நம்முன்பாக விரண்டு புதார்
த்தங்கள்,—திருக்குறள் பிரதி யொன்றும்சிவஞானபோதம் பிரதி
யொன்றும் இருப்பதாக வைத்துக் கொள்வோம். யாதானுமொரு
வன் ஒரு புத்தகத்தை மற்றொன்றாகக்கண்டு மருளுவானாதல்,
அவையே மாயையென்று சொல்லலாம். மித்யாஞானம், தப்பறிவு
அல்லது அவித்யா அல்லது ஆணவம் என்று சொல்லுதலு மொ
ல்லும். இங்கே இந்த இரண்டு புத்தகங்களு மிருக்கின்றன வெ
ன்ற வுண்மையை யொருவரு மறுத்திலர்.

ஆயின், "பொருள் அல்லவற்றை என்றதற்குப் பதிலாக,
பொருள் இல்லவற்றை" என்ற பதப்பிரயோகம் இருந்திருக்கு
மானால், அப்போது அர்த்தம் முழுமையும் வேறுபாடடைந்து
போகத்தடையில்லை. அப்போது எடுத்துக்கொண்ட பிரஸ்தாப
குறளுக்கு வேறு ஓர் அர்த்தம் உண்டாய் விடுமென்பதுண்மை.
அதாவது, நம் முன்பாக யாதொரு குறளின் பிரதியொன்று
இல்லை யாகவும், யாதொன்று இருப்பதாக நாம் மனஸ்தாபி

க்கலாயினோம் என்ற விபரீத அர்த்தம் அது கொடுக்கக் கூடும். முன்னம் சொன்ன விஷயத்தில், நம்முன் னிருந்த பதார்த்தங்களின் இருப்பு சந்தேகிக்கப் படுதற்கு இடன் காணேம். இரண்டாவது யாம் மேற்கொண்ட விசாரணை விஷயத்தில் நம்முன்பாக விருந்த பதார்த்தத்தின் உண்மையான இருப்பு ஒப்புக் கொள்ளப்படாமற் போய்விட்டது கண்டீர். சாதாரணமா யெடுத்தாளப்பட்ட "கிளிஞ்சல் வெள்ளி" என்ற திருஷ்டாந்தத்தில் இரண்டு பதார்த்தங்களும் எண்ணக் குறிப்புகளும் வாஸ்தவமாக வுள்ளனவேயாம். அவையிரண்டும் உள்ளபடியே தனித்தனியு மிருக்கும் வேறுபட்டுக் கிடந்தாலும் ஒன்றையொன்றாகக் மயக்கவறிவால் கொண்டோம். அப்படிக் கொண்டதும் இவையிரண்டனுக்கு முள்ள ஒரே மாதிரியான காட்சியைக் கொண்டும் நாம் மருள நேரிட்டது. கிளிஞ்சலைப் போன்ற யாதொரு காட்சி வெள்ளிக்கு முள்ளது. ஒன்றைப் போன்ற காட்சி மேற்கூறிய விரண்டு புத்தகங்கட்கு முள்ளது. நம் முன்பாகக்கிளிஞ்சல் இல்லாதபோது, வெள்ளி ஞானம் நம்முன்பாக தோன்றக் கூடுமானல் இது அபாவ, அர்த்தத்துக்குத் திருஷ்டாந்தமாகும். ஆனல் சாதாரணமாக அப்படிப்பட்ட யாதொரு பதார்த்தம் அல்லது எண்ணக் குறிப்பு நம்முன்பாகத் தோன்றவே மாட்டாது. இதே வித்தியாசம் இந்த இரண்டு மதங்களிலும் நாம் அவைகளை உணர்ந்துதி நெடுகத்தோன்றுவ தொன்றும். ஒரு மதமானது உடம்பும் உயிரும் உட்பட்ட பிரபஞ்சத்தை மெய்யாகவே கூறுகிறது. ஆனல் சாதாரணமாக நாம் உடம்பையே அறியாமையால் உயிர் அல்லது ஆத்மா வென்று நினைக்கின்றோம். அதனலே அதற்கு—உடம்புக்கு—வேண்டிய விஷயங்களையே கவனிக்கலாயினோம். நம்முடைய கடமையோ ஆத்மாவின் ரக்ஷிப்பைப்பொறுத்த தொன்றாயிருத்தல்வேண்டும். இதை நாம் மறந்தோம். அப்படியே, சிலவேளை ஆன்மாவையும் அறிவின்மையால் கடவுளென்று எண்ணிப் பிராந்தியிலாழ்கின்றோம். இவைகளைத் தனித்தனியே ஆராய்ந்து பார்த்து இவைகளினுண்மையான சொரூபத்தை யுள்ளபடியே யுணர்ந்தோமாயின், மேலும் உடம்பைச் சார்ந்த சுகங்களின் அற்பத் தன்மை

யையும் உள்ளபடியே புலனாகப் பெற்றோமாயின், அல்லாமலும் பரமேஸ்வரனோடு அத்வைத சம்பந்தம் பெற்று அநுபவிக்கும் வழியாகச் சிவயோகத்தை யுத்தேசித்துத் தேவயோகங்களைப் பின் னடைதலை யதிலே யொழித்து விட்டோமாயின், நாம் செல்லவேண்டிய மார்க்கம் பரிசுத்தமாய்ப் போய்விடுமே.

ஸ்ரீ திருவள்ளுவ நாயனார் இதே அபிப்பிராயத்தைத் தழுவினவராய் ஒரு குறள் கட்டளையிட்டருளியுள்ளார்.

"இருள் நீங்கி இன்பம் பயக்கு மருள் நீங்கி
மாசறு காட்சியவர்க்கு"

இந்த விசாரணையில் உலகத்தின் இருப்பை மறுப்பான் யாதொரு முயற்சியும் ஏற்படக் காணோம். பாபத்தின் இருப்பும் மறுக்கப் படவில்லை. நம்முடைய இருப்பும் கடவுளிருப்பும் மறுக்கப் படவில்லை. ஆனால் இந்தப் பதார்த்தங்களுள் ஒன்றினின்றும் ஒன்றை வேறு பிரித்துப் பார்ப்பான் நாம் ஏவப்படுகின்றோம். மற்றைய மத திருஷ்டியில், உலகமென்பதொன்றில்லை பாவமில்லை, ஆன்மாவில்லை—மேலும் இவை போன்ற எல்லா விபரீதமயக்கத் தோற்றங்களும் எழாநின்றன. ஆனால், "ஏன்" அப்படி எழல் வேண்டும் என்ற கேள்விக்கு மட்டும் சமாதானமே கிடையாது.

ஆனாலும், முதற்கண் நாம் ஒன்று உறுதியாகச் சொல்லி முடிப்போமாக. சித்தாந்த சாஸ்திர விசாரணையை மேற்கொண்ட பலநூல் ஆசிரியர்கள் எதிர்மறை அசையை—ந, என்ற முதலெழுத்தை—"அபாவ" அர்த்தத்தில் கொள்ளாமல்—அதாவது "இன்மை" ப்பிரயோகத்தில் அமைத்துக் கொள்ளாமல்—சாதிருஸ்ய "அன்மை" ப்பிரயோகத்தில் அமைத்து மகிழ்வாராயினர். மேலே அவர்களுடைய மதவிசாரணையை அவர்கள் என்னவிதம் பூர்த்திசெய்கின்றார்கள் என்பதை யோதுவோமாக.

கவுண்ட் டால்ஸ்டா என்ற கனவான், மதமாவது மக்களொருவன் தனக்கும் அதாவது தனது சொந்த வடிவத்துக்கும்

முடிவுக்கும் பிரபஞ்சத்துக்கும் ஏற்படுத்திய சம்பந்தம் என்றும், “தருமமாவது” (morality) இந்தச் சம்பந்தம் காரணமாகத் தனது வாழ்க்கையைச் சீர்பெற நடத்துதல் என்றும் கூறுகின்றார். சித்தாந்த ஆசிரியர்களும் இதே மாதிரியாகவே கடவுளுக்கும் மக்கட்கு முள்ள சம்பந்தத்தையும் கடவுளுக்கும் பிரபஞ்சத்துக்கும் உள்ள சம்பந்தத்தையும் புகுந்து ஆராய்வான் முயற்சிப்பாராயினர்.

அப்படிச் செய்வதினால் எல்லாத் துன்பத்தையும் பாபத்தையும் அறவே ஒழிப்பான் பிரயோசனப்படும் கருவிகளை அல்லது சாதனத்தை நமக்கு வழித்துணையாம் படி அன்னாரே கூறுகின்றனர்.

சிவஞான போதம் இரண்டாம் சூத்திரத்தின் முதல் இரண்டு வார்த்தைகளிலேயே முதல் பிரமாணவுண்மை யடங்கி யிருத்தல் ஆழ்ந்து சிந்திப்பார்க்குச் சாலப்பிரகாச மாகும்.

“அவையே தானே யாய்”

கடவுள் அவைகளோடு ஒன்று பட்டும்

வேறாகவும் இருக்கின்றார்.

இத்துடன் கூட ஸ்ரீ அருணந்தி சிவாச்சாரியசுவாமிகள் மற்றொரு சம்பந்தத்தையும் சேர்த்துச் சொல்கின்றார்கள். அதாவது “உடன் அல்லது பேதாபேதம்” என்பதேயாம். இதில் அபேதம்—பேதம்—பேதாபேதம் என்ற சம்பந்தங்கள் எல்லாம் தொக்கு நிற்கின்றன.

ஆனால், மற்றைய மதங்களோ வென்றால்—இந்த சம்பந்தங்களில் ஒன்றை மட்டும் ஆதாரமாக வொப்புக்கொண்டு அதன்மேல் தத்தம் மதக்கட்டிடங்களைக் கட்ட வாரம்பிக்கின்றன. “அபேத” சம்பந்தத்தை நிரூபித்தற்கு உபயோகப்படுத்தும் உபமானம், “பொன்னும் பணியு” மென்பதே. “பேத” சம்பந்தத்தைக் காண்பிக்கும்படி யெடுத்தாளப் பட்ட உவமை யலங்காரம் “இருளும் ஒளியும்” என்பதே. “பேதாபேத” சம்பந்தத்தை மெய்ப்படுத்துவான், துணைக் கொண்ட உபமானம் “சொல்லும் பொருளும்,” என்பதே. இந்த பல்வேறுபட்ட இரு

ஷ்டிகளை (views) ஒன்றோடொன்று ஒக்கச் செய்தலசாத்ய மாகும். இவைகள் சந்திக்கத் தக்க இடம் ஒன்றும் காண்பதரி தாயிற்றென்க. இந்த பல்வேறு பட்ட சம்பந்தங்களையுமே சித் தாந்த ஞானம்பீடிகையாக ஒப்புக்கொண்டு வியவகாரம் செய்யா நின்றது கண்டீர். ஆனால் சித்தாந்திகள் இவைகட்கு வேறு திருஷ்டாந்தங்களை வெடுத்துக் காண்பிக்கின்றனர். அதாவது, "உடம்புமுயிரும்" என்றதை "அபேத" வாதத்துக்கு உப யோகம் செய்கிறார்கள். "கண்ணும் கண்ணொளியும் அருக்க னொளியும்" என்றதைப் "பேத" வாதத்துக் குபயோகம் செய் திருக்கின்றார்கள். "ஆன்மாவும் கண்ணொளியும்" என்றதை "பேதாபேத" விலக்கணத்தைத் தரிசிப்பான் எடுத்து ஆளு கின்றார்கள். இவ்வுண்மை மேலே உதகரிக்கப் பெற்ற ஸ்ரீ உமா பதி சிவாசார்ய சுவாமிகளின் மெய்ம் மொழிகளைத் தரிசித்த வழியே நாம் காணலாகும். இம்மூவகையாக இருந்தும் ஒன்றை யொன்று முரண்படுத்தாது இந்தவாதங்கள் சித்தாந்த மதத்தில் பிரகாசிப்பனவாயின. ஆதலினால், இந்த சித்தாந்த அற்புத திரு ஷ்டியில் ஏதோ நவீனமானதோருண்மை யிருத்தலை நாம் உணர்ந்தறியக் கடமைப்பட்டிருக்கின்றோம். ஏனென்றால் இந் தப் பல்வேறுபட்டசம்பந்தங்களை சமரஸப் படுத்திக்களிப்புறும் பெருமிதம் இதனிடம் தானே காணக்கிடைப்பதன்றோ? அப் படிக்கிருந்தும் தன்னுடைய கூற்றுக்கும் இவைமுரண்படாமல் முடிந்தனவன்றோ? மேலும் ஒன்றை யொன்று கிரமப்பிரகாரம் தழுவி நின்று ஒரு பெரு முதலாகவும் இவை முடிந்தனவன் றோ? என்னே! இதனருமை பெருமை! மேலும் இந்த நவீன சம்பந்தத்தைத்தான்—சுலபத்தில் தொட்டுக் காட்டக் கூடாத தும் இன்னதென்று வரை யறுத்துக் காட்டக் கூடாததுமாயு ள்ள தாகியவிது—"அத்வைதம்" என்ற அரும்பத பிரயோகத் தால் சித்தாந்தச் செல்வராகும் நம்மனோர் கூறி மகிழ்ந்தனர் அன்றே!

*ஸ்ரீ மெய்கண்ட நாதனும் இரண்டாம் சூத்திரம்முதல் அதி கரணத்தில் இந்த பதத்தைத் தானே விசாரிக்கப்புக்கார்.

"இது ஈண்டு அத்துவிதம் என்ற சொல்லானே ஏகமென்னில், ஏகமென்று சுட்டுவதுண்மையின் அத்துவிதமென்ற சொல்லே அந்நிய நாத்தியை உணர்த்துமா யிட்டு."

அதாவது பொருள் மாத்திரத்தானே வித்யாஸ மிருப்பதுண்மையேனும், ஒன்றி னின்றும் ஒன்றைப் பிரித்தல் முடியாததால், அவைகளின் வேறன்மையை வற்புறுத்திய தாகும்.

இதற்கு அப்பெரியார் "உயிர் உடல்" என்ற திருஷ்டாந்தத்தை யெடுத்து வோதலாயினர். இவையிரண்டும் வேறு வேருயிருந்தாலும் கூட, யாதொரு உயிர் தனது சரீரத்தோடு தான் ஒன்று பட்டுக் கிடக்கின்றது. அவையிரண்டனுக்கு முள்ள பிரிவுபடாச் சம்பந்த விசேஷத்தால் இதேமாதிரியாகவே, உயிரும் தன் இறைவனுடன் ஒன்றாகவே தன்னைக் காணுநின்றது! ஆயினும் கடவுள் ஆன்மாவல்லர். ஆன்மா கடவுளாகாது. அதனானே கடவுள் ஒருவரே, அவர் ஆன்மாவுடன் ஒன்றாயிருந்தும் வேறாகவு மிருக்கின்றார். அவரது இரண்டாவது வெண்பாவில் "ஏகமேவாத் விதீயம்" என்ற மந்திரத்தைக் கூறுபடுத்தி உதாரணமுகத்தால் விசாரிக்க லாயினர்.

" ஒன்றென்றது ஒன்றேகாண் ஒன்றே பதிபசுவாம்
ஒன்றென்ற நீபாசத் தோடுளேகாண்—ஒன்றின்றால்
அக்கரங்க ளின்றாம் அகரவுயிரின்றேல்
இக்கிர மத்தென்னு மிருக்கு."

இந்தத் திருஷ்டாந்தத்தை யூகித்துச் சரிவரவுணர்ந்தோமேயானல் அதன் (அத்வைத பதத்தின்) உண்மையார்த்தம் நமக்கு உள்ளபடியே மென்மேலும் பிரகாசமாகத் தடையில்லை. உதாரணம் உயிரெழுத்தையும் மெய்யெழுத்துக்களையும் பொறுத்த தொன்றாம். அதாவது. உயிரும் மெய் அல்லது உடலும்—ஆத்மாவும் அதன் உடலும் என்ற அர்த்தத்தையுந்தரும்.

" உடல் மேலுயிர் வந்து ஒன்றுவது இயல்பே."

உயிரெழுத்தானது மெய்யெழுத்துக்களோடு ஒன்றி நிற்பது இயற்கையைப் பொறுத்த சம்பந்தமேயாம். இது நன்

னால் சூத்திரம். 'உடலும் ஆன்மாவும்' "என்ற திருஷ்டாந்தம் தான் முதல் பாட்டில் நமக்குச் சொல்லி வைக்கப்பட்டது. ஆகையினலே கடவுளுக்கும் பிரபஞ்சத்துக்கும் நேரிட்டுள்ள சம்பந்தத்தை வெளிப்படுத்த நமக்கு இரண்டு விதமான உதாரணங்கள் கிடைத்திருக்கின்றன கண்டீர். ஒரே பெயரால் பேசப்பட்ட இந்த இரண்டு திருஷ்டாந்தங்களுமே, உயிருக்கும் உடம்புக்கும் உள்ள சம்பந்தம் தானே உயிரெழுத்துக்கும் மெய்யெழுத்துகளுக்கும் ஏற்பட்டுள்ளன வென்று நமக்கு ஸ்பஷ்டமாக எடுத்துக் காண்பியா நின்றன,

விசிஷ்டாத்வைத மதநூலாசிரியர்கள் இந்த "உடலுயிர்" என்ற திருஷ்டாந்தத்தையே உபயோகித்துள்ளார்கள் என்பது நிச்சயமே. ஆனல் எந்த சந்தர்ப்பத்திலும் அன்னர் இந்தசம்பந்தத்தைக் குறித்து யாதொரு விசாரணையு மேற் கொள்ளக்காணேம். இதன்றியும் "உயிரெழுத்து மெய்யெழுத்து சம்பந்தம்" என்ற உவமானத்தையும் அவர்கள் உணர்ந்தவர்களாகக் கொஞ்சங்கூட ஏற்படக்காணேம்.

டாக்டர் பெய்ன் என்ற துரை இந்த கேள்வியைத்தமது "மனசும் தேகமும்" என்று மகுடம் புனைந்த நூலின்கண் விசாரணை மேற் கொண்டுள்ளா ரென்றறிக. நாம் அதைக் குறித்து "சித்தாந்த தீபிகை" இரண்டாம் வால்யம் பக்கம் 13ல் எழுதியிருக்கின்ரோம். அதையே மீண்டும் இங்கு விவரிப்பாம்.

# உயிரெழுத்துகளும் மெய்யெழுத்துகளும்.

(மனசும் தேகமும்)

*"எழுத்துகளிலே, நான் அகர*
*மாயிருக்கின்றேன்."—பகவத்கீதை.*

"ஜடப்பொருளாகிய விஷயம், அல்லது பதார்த்தத்தோடும் பரந்துகிடக்கும் பிரபஞ்சத்தோடும் மனம் ஒன்று பட்டிருக்கின்றது. ஆனால், அந்த சம்பந்தம் அடைந்துள்ள மனதுக்குசிகளமகல மில்லாததால், மற்றதனுடன் இட சம்பந்தத்தை யது பெறுதலு மரிது. இந்த அபூர்வமான ஒற்றுமையை எந்தவிதமான பாஷையினாலாவது வழக்கத்திலுள்ள எந்த விதமான உதாரணத்தினாலாவது விளக்கலா மென்றால் கஷ்டமாயிருக்கின்றது. எல்லா சாமான்யமான சேர்க்கைகளையும் நோக்கி இது முரணாகவும், நொடியுள்ளதாகவும் காணப் படுகின்றது. [பெயின் பண்டிதர்]

மேலே நாம் உதகரித்துள்ள வசனங்களானவை 'மனமும் உடலும்' என்ற மகுடங் கொடுத்து டாக்டர் பெயின் எழுதியுள்ள முக்கியமான புத்தகத்தினின்றும் எடுக்கப்பட்டது. அந்த புத்தகத்தி லடங்கியுள்ள பல அத்தியாயங்களும் நாம் சிரத்தையோடும் வாசிக்கக் கூடியவைகளையே யாம். ஆனால் மகா பண்டிதராகிய அவர்களின் முடிவுகளை நாம் ஒப்புக்கொள்ள வேண்டிய அவசியம் காணோம். அவர் எண்ணுவது போல இவ்விதமான தத்வஞானம் தான் இனிமேல் வருங்காலத்து நிலைக்குமென்றும் நாம் எண்ண வேண்டியதில்லை. ஆனால் முக்கியமாக இப்போது அவர் காட்சிப் பிரமாணத்தினால் அறியக்கூடிய விஷயங்களைக்குறித்து மட்டும் ஆராய்வது தான் நமதுகடமை.

அதன்மேல் கிரமமான தர்க்கசாஸ்த்திர சம்பந்தத்தைக் கொண்டு நாம் அநுமானிக்கக் கூடிய விஷயங்களை யநுமானிக்கக்கூடும். இவ்விதமாக ஆராயப் புகுந்த விடத்து மனதுடல் இவ

ற்றின் தன்மையும், அவற்றின் சம்பந்தமுந் தானென்ன. மனம் என்பது அறிவு (Intellect) இச்சை (Will) உணர்வு (feelings) (உணர்வு என்றபதம் ஐம்புலனுகர்ச்சியின் உண்டாகிய இன்பதுன்ப உணர்ச்சியுடன் காமகுரோத முதலிய அநுபவங்களையும் உணர்த்தும்.)

"இவைகள் ஒன்றினில் மூன்றாயுள்ளது. இவைகள் மூன்றும் தம்மில் வேறுபட்டிருந்தும் ஒன்றைவிட்டு ஒன்று இயங்காத்தன்மையால் ஒன்றை ஒன்று சார்ந்து நிற்கின்றது. அறிவும் இச்சையும் உணர்வு நிகழ்ந்தாலன்றித் தனியே எதுவும் காணப்படமாட்டாது. உணர்வு பூரணமாக வெளிப் பாடடையுங்காலம் அவைகளோடும் கூட, மற்றவைகளின் மூலமும் தோன்றியே நின்றதென்க."

உணர்வும் முடிவில் இன்பதுன்பமேயாகும்! அவ்வுணர்வை இச்சையுடன் ஒன்றாக மயங்குதல் சாலாது. ஆனாலும் டாக்டர் பெயின் என்பவர்மேலே உதகரித்த வாக்கியங்களில் அபிப்பிராயப் படுவது என்னவெனில், உணர்வு நிகழ்ச்சியின் பின்பற்றியே அறிவும் இச்சையும் வளருமென்றும் எண்ணயாவதும் அவ்வுணர்வுள்ளும் ஐம்புலன்கள் வழியாக உண்டாகின்றதென்றும் தான் வெளியாகின்றன. மேலும் இன்பமும் உயிரை வளர்ககச் செய்யும் யாதொரு கர்மத்தினாலே உண்டாகக் கூடியதாயுள்ளது (உயிர்க்கிதம் செய்தல்) துன்பமும் யாதொரு உயிர்க்குகேடு தேடியசெய்கையைப் பொறுத்ததாயுள்ளது (உயிர்கதம் செய்தல்) நீதி நூல்களினும் இதைக் கொண்டே நன்மை தீமை, புண்ணியம் பாவமெனவும் பாகுபாடு ஏற்படுகின்றது. மையைத் தான் காப்பு விதியென (Law of conservation) * மேலும் கூறுவர். ஆனாலும் எல்லா இன்பதுன்பங் கட்கும் ஒருவனரயறை யுள்ளது. அதிக்கிரமித்தால் சந்தோஷமுங் கூட துக்கமாய் முடியும். இன்னொரு உண்மையு முண்டு. இம் மனோதத்வ சம்பந்தமாக அதை சம்பந்தவிதி யென்பார்கள்.

---

* காப்புவிதி யென்றது பதார்த்தங்களின் சூட்சுமசக்தி யென்றும் குன்றுபடாது என்றும், அதிகப்படாதென்றும் கொள்வது.

'நாம் பிரஞ்ஞையோடு விளங்கவேண்டுமானல் நம்முடைய நினைப்பும் உணர்வும் மாறுபட்டு வரவேண்டு'' மென்பதே. எவ்வித வுணர்வும் அறிவும் நீண்டு அநுபவிப்போமானல், அது வர வரக்குறைந்து மெலிந்தும் முடிவில் உணர்வு அற்றே அந்தகாரமாய்ப் போய் விடும். மறுபடியும் ஷை உணர்வை நினைப்புக்குக் கொண்டு வரவேண்டுமானல் அதனை மறந்து வேறொன்றை நினைத்து மறுபடியும் முன் நினைப்பை நினைக்கவேண்டும்—தமிழ் தத்வஞானிகள் இந்த உண்மையை 'நினைப்புண்டேல் மறப்புண்டாம்' என்று கூறுகின்றார்கள்.

இந்த விதியின் உண்மை எட்டவில்லை விளங்கவில்லை யென்றார், பய்ன்பண்டிதர். ஆனல் ஹிந்துதத்வஞானிகள் இதற்கு தக்க நியாயம் கூறவல்லவராயினர். மனிதனறிவு சிற்றறிவு. அது நாளடைவில் அதிகமாகப் பலப்படுத்திக்கொண்டேபோகவும் நிறைந்த சாதனத்தினலே, மனமுழுமையும் அறிவு மயமாகி விடக்கூடும். யோக அப்பியாசம் செய்யும் போது முதல் முதல் வரக்கூடியது இருளேயாம். பிரகாசமல்ல. இருட்டே அதிகரித்துக் கொண்டுபோகும் சில நேரம். ஆனல் யோகசாதனையிலேயே ஒருவன் முற்றுவானனல் முடிவில் உண்மை ஒளிபிறக்கும். அவனுக் குண்டாய் விடுகிறது இடையிலுள்ள காலத்திலே அந்த வொளியின் பலவித வேறுபாட்டால் பலவித தப்பபிப்பிராயத்துக்குட் படுத்தப் படுகிறது. முடிவில் நம்முடைய இச்சைதான் நம்முடைய உணர்வு வழியே சென்று நம்முடைய கர்மங்களை ஏவுகின்றது. அறிவும் பேதவறிவென்றும் அபேத அறிவென்றும், * ஞாபகஅறிவென்றும் பிரிகின்றது. ஞாபகசக்தி, புத்தி, தீர்மானம் செய்யும் சக்தி, முதலிய மற்றைய எல்லா மனே சக்திகளையும் இந்த மூன்று தலைப்பின் கீழாகக் கொண்டுவந்து விடலாம். அறிவுண்டாதற்கு மூலமாயுள்ளதது என்க. விஷ

* பேத அறிவு (Sense of difference) என்றது பதார்த்தங்களை வெவ்வேறாக வைத்து அறியும் அறிவு—அபேத அறிவு (Sense of similarity) அப்பதார்த்தங்களில், ஒற்றுமை யிருப்பதையறியும் அறிவு.

யங்களில் பேதமில்லா விடில் எல்லாம் ஒரே தன்மையினதாகவே விருந்து விட்டால், யாதொரு அறிவும் அல்லது யாதொரு அறிவுநிகழ்ச்சியும் கூடாமை யாகும். ஒரே வர்ணமிருந்திருக்குமாளுல் சித்திர சாத்திரம் குதிரைக் கொம்பாக முடிந்துவிடும். ஒரே சப்தம், ஒரே சுரம், இருக்குமாளுல் நாம் சங்கீதம் கேட்பதற் கில்லாமற் போய்விடு மன்றே? இப்போதிருக்கிற விஷயங்களை யுய்த்து நோக்குவோமாளுல், சம்பந்த விதியானது* நம்முடைய எல்லா வியவகாரங்களுக்கும் அடிப்படை யாயிருக்கின்றது. பேதமிருந்தால் மட்டும், அபேத ஞானம் நமக்கு உபயோகமாகும். ஆகையாற்ருன் அபேத ஞானத்தையும் ஒரு அறிவின் கூருக எண்ணப்பட்டு, உலக வியாபாரங்களை நவீனம் நவீனமாகக் கண்டுபிடிப்பதில், முக்கியகரமாயுள்ளது. கடந்துபோன நமதநுபவங்களையும் எண்ணங்களையும் நாம் ஞாபகம் பண்ணிக்கொள்ளும் சக்தி நமக்கில்லாத பட்சத்தில் அதியற்புதமான மனோசக்தியை நாம் பெறுதல் அருமையாய் விடும் மேலும் மனசுக்கு ஒரு அபூர்வமான குணமுண்டு. அதைய தன் தோஷமாகக் கூடச்சொல்லலாம். அதுவும் முன்னே சொன்ன சம்பந்த விதியை ஒட்டியது. நம்முடைய அறிவு நம்முடைய எல்லாப் புலன்களை ஒன்ருக ஒரே காலத்தில் அறியமாட்டாது கிடக்கிறது. ஒரே தடவையில் யாதொரு கண்ணிளுல் காணும் ஒரு பதார்த்தத்தையும், ஸ்பரிசத்தால் அறியும் மற்ருென்றையும், செவியால் தொடும் பிறி தொன்றையும், நாசியால்உணரும் இன்னுமொன்றையும் அநுபவித்தல் கூடாமையே. எத்துணையற்பமாக அது காணப்பட்ட போதினும் கூடபனம் ஒன்றி னின்றும் ஒன்றுக்குபாய்வதற்கு இடையில் கால அவகாசம் ஒன்றுண்டாய் விடுகிறது. அஷ்டாவதானசக்தியும் இதற்குமுரணல்ல வென்க. அவனுக்கு நல்ல ஞாபகசக்தி யிருத்தல் இன்றியமையாத தொன்றும். அதைக் கொண்டும், எத்துணையதிகமான அவதானங்களை ஒருவன் செய்து முடிக்கின்ருனே

---

* சம்பந்தவிதி—(Law of Relativity) என்றது நாமும் உலகமும் பேதப்பட்டு நின்று தான் அறிவுண்டாகும் என்பதும், ஏகபதார்த்தமுண்டெனில் அதனைத் தரிசிக்க இயலா தென்பதும்.

அத்துணை யதிகமாக அவன் காலத்தை நீட்டியே செய்தல் வேண்டும்.

இப்படி மனோதத்துவத்தைக் கூறுபாடு செய்து காண்கிற போது, யாதோ ருணர்வுக்கும் அதோடு சேர்ந்த பிரஞ்ஞைக்கும், இச்சைக்குப் அதோடு சம்பந்தப்பட்ட பிரஞ்ஞைக்கும் அநுமிதித்தற்கும் அதைத்தழுவி நிற்கும் பிரஞ்ஞைக்கு, பேதம் பாராட்டாமல் இரண்டும் ஒன்றாகவே எண்ணப்படுகின்றன. ஆயின் நம்முடைய தத்வஞான விசாரணையில் அவைகளின் வித்யாஸம் பேசப்படுகிற துண்மை. உணர்வு இச்சை அறிவினையும், அவைகளைத்தழுவிய பிரஞ்ஞையினின்றும் வித்யாஸப்படுத்திக் காண்பிக்கப்படுகின்றன. சுத்தபிரஞ்ஞையைத்தான் ஆத்மா அல்லது சத்தென்று நாம் அழையா நின்றோம். மற்றைவையெல்லாம் உடம்போடும் உலகத்தோடும் சேர்த்துப்படிக்கப்பட்டு அநாத்மா அல்லது அசத் என்று தள்ளப்படுகின்றன. இந்த விதயாஸத்தைப்பற்றி மேலே போகப்போக நாம் விரிவாகப் பேசுவோம். ஆனாலும், அறிவு அறிவின் கூறுகளினின்றும் உடலும் உலகமும் அதனுடைய வியாபாரங்களும் வேறு பிரித்துக் காட்டப்படுகின்றன. இவை யெல்லாம் மொத்தமாக ஜடமென்றேனும், அல்லது அநாத்மா வென்றேனும், அல்லது ஞேய (விஷயம்) (object) பதார்த்தமென்றேனும், அழைக்கப்படல் காண்க. இவைகட்கென்றே சில குணங்களுள்ளன. அவைகள் மனசினிடத்தே காணப்படவே வில்லை. அவையாவை? அகலமும் நீளமும் (இடசம்பந்தமான அமைப்பு) இடங்கொளல், கெட்டியாயிருக்குந்தன்மை, மிருதுவாயிருக்குந்தன்மை, (அசைவிலாமை) பளுவு, வர்ணம், சூடு, ஒளி, மின்சாரசத்தி, உறுப்புகளைச்சேர்ந்த தருமங்கள், ரசாயன சாஸ்திர சம்பந்தமான தருமங்கள் முதலிய. இவைகள் யாவற்றினும் முக்கியமாவது இடங்கொளற் றன்மை யென்பதே. மனம் அங்ஙனமன்று. டாக்டர் பெயின் கூறுவதாவது.

"நமக்கு இந்த கஷ்டம் நேரிடுகிறது. மனோ நிலைகளும் தேகநிலைகளும் முழுவதும் வேறு வேறாக காணப்படுகிறது. அவை

யொன்றுகவைத்தெண்ணப் படுவதற்கு மிகவும் பொதுவாகச் சொல்லலாகும், காலவொற்றுமையைத்தவிர எவ்விதமான சமத்வமும் சொல்லுவதற் கிடமில்லை. ஒன்றினிடத்து நாம் புத்தியை வைத்துள்ளபோது மற்றொன்றின் குணங்களின் வேறுபாடுகள் முழுமையுமே நாம்மறந்து விடவேண்டியிருக்கிறது. நாம் ஒரு மூளையையும், நரம்புகளையும் பற்றி விசாரணைமேற் கொண்டபோது, நாம் ஞேய பதார்த்தம் அல்லது ஜடபதார்த்த சம்பந்தமான விஷயத்திலேயே மனமுழுதையும் செலுத்தலாகிறோம். அந்த நிமிஷத்திலே உள்ளபடி அறிவின் தொழிலைச் சிந்திப்பது கூடாமையாயுள்ளது அதிதுரிதமாக, நாம் நினைப்பை மாற்றினுலொழிய. நம்முடைய மனோ அநுபவத்திற்கும், நம்முணர்ச்சிகளுக்கும் நமதெண்ணங்கட்கும் பரப்பில்லை, இடமில்லை, உருவமில்லை, உருவம்போன்ற குறியுமில்லை, பிரிவுமில்லை அவயவமுமில்லை. * இவையெல்லாவற்றையும் மறந்தாலொழிய மானசவியாபார மொன்றையும் நாம் கவனிக்க முடியாது. நாம் நாட்டுப்புறத்தில் இளவேனிற் காலத்தில் உலாவித்திரியும் போது, நம்முடைய மனசானது அங்குள்ள கொடிகள் புட்பங்கள், புல்மேடைகள் முதலியவைகளின் கண்ணே பிரவர்த்திக்கிறது கண் கூடாமே! இவைகள் முழுமையும் ஞேயபதார்த்தங்களேயாம். திடீரென்றும் பலத்தோடும் மேபிளாசம் என்ற புட்பத்தின் வாசனை நம்முடைய மனதைக் கவர்கின்றது.

"ஒருநிமிஷம் அந்த சுகவாசனையில் நாம் விழுங்கப்பட்டு நிற்கின்றோம். அந்தக்கணம் வரைக்கும் பிரபஞ்ச வாசனை நமக்கில்லாமற் போய் விடுகிறது. பரப்புள்ள பதார்த்தம் ஒன்றனையும் நாம் நினையாமல் நிற்கின்றோம். நமக்கு இடம் என்ற பொருளே இல்லாமற் போய்விடுகிறது. அப்படிப்பட்ட நிலைகளானவை வெகு சொற்பநேரம் தான் ஜீவிக்கின்றன. க்ஷணமாத்திரமாக மின்னல் போல மிளிர்வன. அவைகள் அடிக்கடி பிரபஞ்சவிஷய வாசனைக

* சிவஞான சித்தியார், 4 சூ-15 பாட்டில், உயிரை அணுவென்றால் அதற்கு அவயவம் செப்பவேண்டி சடப்பொருளோடு ஒன்றாய்க்கெடும் என்றார்.

ளோடும் கலந்து மாறி மாறி வருகின்றன. அவைகள் இருக்கும் வரையில், முழுசக்தியோடும் பிரவர்த்திக்கும் வரையில், நாம் வேறு லோகத்திலிருக்கின்றோம். ஜடவுலகம் கெட்டழிந்துபோகின்றது. மறைக்கப்படுகின்றது, அந்த நிமிஷத்துக்கு நினைக்கக் கூடாதபடிபோல் விடுகின்றது கண்டீர்.

"இவ்வறிவு நிகழ்ச்சிகளை அதிசந்தோஷம் நமக்குதிடீரென்று உண்டாகுங் காலங்களிலும், அல்லது சொல்ல முடியாத பெருந் துக்கம் நம்மை சடுதியில் மூடும்போதும், மற்றொன்றையு முணராது நாம் ஒருதனி விஷயத்தில் புத்தி முழுதையும் செலுத்தி மனோவியாபாரம் செய்து கிடக்குமமையத்தும், முக்கியமாக தியானநிலையிலழுந்தும் போதும், நாம் சரியாக உணரக்கூடும். ஆனால் அவைகள் கொஞ்சம் காலத்துக்கு அல்லாமல் நீண்டகாலம் பரிசுத்தமாக நம்மால் நினைக்கப்படுவதில்லை. அடிக்கடி விஷயவாசனைகள்--பரப்பு இடமுள்ள உலகவிஷயம்—நம்மையிழுத்துக்கொண்டு போய் விடுகின்றன."

எத்துணைபேதமுள்ள வைகளாக இவைகள் காணப்பட்டாலுங் கூட, ஒரு ஆச்சர்யமான விஷயமுண்டு. உணர்ச்சியுள்ள ஒரு ஆத்மாவினிடம்—மனிதன், அல்லது மிருகத்தினிடம்—அவை ஒன்று சேர்ந்துள்ளதைக் காண்பாம். இவ்விரண்டின் சேர்க்கை, ஒற்றுமை, அடுத்தடுத்து வளருந்தன்மை,—இவைகளைத்தான் டாக்டர் பெயின் துரையவர்கள் பல அத்தியாயங்களில் வெகுசிரமத்தோடும் நமக்குக் காண்பிக்க முயலாநின்றனர். இதை நாம் மறுத்துக்கூற வேண்டிய அவசியமில்லை. இந்த சேர்க்கையாலும் ஒற்றுமையாலும், மனம் உடம்புக்குக் காரணமென்றுதல் உடம்பு மனசுக்குக் காரணமென்றுதல், நாம் யூகிப்பதற்கு யாதொருகாரணமுமில்லை யென்றே டாக்டர் பெயின் துரையும் ஒப்புக்கொள்ளுகின்றன ரன்றே? ஆனால், அவருடைய கட்சிதான் யாதோ வென்றால், சொல்லுதும். மனோதேகமே (உடல் உயிர்) மனோதேகத்துக்குக் காரணம் என்கிறார். எவ்வளவு தூரம் சென்றும் நாம் கூறுபாடு செய்துபார்க்கும்போது துவைதம் வற்படுகிறதேத தவிரவேறில்லை. ஆனாலும் உடலை விட்டுத்தனியாக நிற்

கும் யாதொரு உயிரையும் சிந்திக்கத்தக்கதாயில்லை. இதனை விளக்க அவர் பல்வேறு சொற்களை யுபயோகிக்கின்றார். அவையும்?

'பிரிக்கக் கூடாத இரட்டைப் பிள்ளைகள்'

'இரண்டுமுகமுள்ள ஒருபதார்த்தம்'

'இருகுணமுள்ள ஒரு குணி' முதலியன. இங்ஙனமாகவும் டாக்டர் பெயின் துரையவர்கள் ஏன்தாம் ஜடவாதிகளோடு சேர்ந்துக்கொள்ள வேண்டுமென்பது விளங்கவில்லை. அவரை இவையிரண்டனையும் ஜடம் ஒன்றென்றே கூறிவிடவில்லையே. ஜடம் மனசு அல்லது மனமும்—ஜடமும் (சத்து அசத்து) மட்டுமாகத்தானே அவர் அவைகளை யழைபாநின்றனர். ஒருவேளை அவயவம் பெற்றயாதொரு தேகத்துக் கந்நியதா மனசை யவர் நிரூபணம் செய்ய முடியாமையால், அவர் அவ்வாறு கொண்டனர் போலும். இந்த முடிவும் சித்தாந்திலைய யசைத்திலது கண்டீர், அவன் "முத்திபி லுமும் முதலுமுண்டு" என்று கொண்டமையால் சித்தாந்தியும் டாக்டர் பெயினைப்போலவே உடம்புக்கந்நியாதா உயிர் ஒன்றிருப்பதை நம்புவதேயில்லை. இவ்வுடம்பு 25 கீழ்த்ததத்வங்களாலானதெனக் கொண்டான். சித்தாந்த தீபிகையின் முதல்தொகுதி 10வது சஞ்சிகையில் கண்டிருக்கும் தத்வமரத்தைப்படித்துப் பார்த்தால், சர்வோத்கிருஷ்டமான பெருந்தேவதைகட்குக் கூட அசுத்தம் அல்லது சுத்தமாயையினாலான வொருதேகம் உண்டென்பது பிரகாசமாகும். மேலும் நாம் ஒன்று முன்னமேயே குறிப்பிட்டிருக்கின்றோமல்லவா? ஜடத்தை செயலற்றதோர் பதார்த்தமென்று சாதாரண சனங்கள் நினைக்கும் அபிப்பிராயம் தவறென்பதே. ஜடபதார்த்தத்தின் அதிசூக்கும நிலையில் அபார சக்திகள் இருப்பதால் அவைகளையே கடவுளென்று பலர் மயங்கியும்போய் விடுகிறார்கள். நிற்க, இப்போது நாம் கவனிக்கத்தக்கது உடல் உயிருக்கு உள்ள ஒற்றுமையே யாம். அச்சம்பந்தத்தை யிங்கே பேசும்போது முதற்கண் நமக்குண்டாகும் எண்ணம் எல்லாம் இடத்தைப் பொறுத்த சம்பந்தமாகவே முடியும்.

டாக்டர் பெய்ன்துரை, அப்படிப்பட்ட இடசம்பந்தம் நினைக்கக்கூடிய தல்லவென்றும் அசாத்ய மானதென்றும் பன்முறையும்

வற்புறுத்திக் கூறுகின்றனர். பரப்புள்ள, நீளமகலமுள்ள அசித்துப்பதார்த்தத்துக்கும் அங்ஙனமில்லாத சித்பதார்த்தத்துக்கும் இடத்தைப் பொறுத்த சம்பந்தம் இருத்தலமையாது. ஆகையினாலே, 'அகம்' 'புறம்' 'வியாபகம்' 'வியாப்தி' என்ற பலவிதக் கூற்றுக்களெல்லாம் பிசகானவாயும் கெடுதியை விளைவிக்கக் கூடியனவாயுமுள்ளன. இந்த சம்பந்தம், காரணகாரிய சம்பந்தமல்ல. அப்படிப்பட்ட பொருத்தத்தை ஒன்றையொன்று இயக்கும் சம்பந்தமென்றும், அல்லது ஒன்று மற்றதை துணைக்காரணமாகக் கொண்டதாகவும் கூடாது. ஒரேவழியுண்டாகும் காரணசம்பந்தம் என்றதும், தெய்வாதீனமா யேற்படுத்தப்பட்ட பொருத்தமும், இப்போது பழங்கதைகளாகத் தள்ளுபடியாய் விட்டன. * இவ் இயற்கைப் பொருத்தம் அபூர்வமானதென்று நாம் கருதவேண்டியிருக்கிறது. இதைப்போன்ற வேறொரு தனிப்பொருத்தம் பிரகிருதி சம்பவங்களில் வேறெங்கும் கிடையவே கிடையாது. அப்படியிருந்தால் உதாரணத்தால் நாம் இவையோடு ஒத்திட்டுப் பார்க்கலாம். அல்லாமலும் அத்தகைய பொருத்தத்தை வெளியிடற்குத் தகுதியான சொல்லுங் கிடைப்பது அரிது. ஞேயபதார்த்த ஞானத்தினின்றும் ஞாதுரு அறிவினுக்கு மாறிச்செல்லும் மானசகர்மத்தைத் தெரிவிக்க, 'நிலைமையின் வேறுபாடு' என்ற சப்தபிரயோகத்தான் திருப்திகரமாயுள்ளது. இதனை விளக்க சரியான சொல்லுமில்லை, உதாரணமுமில்லை. அச்சம்பந்தம் இருந்தும், ஒருவகையில் அது ஒரு குஹ்ய விஷயமாயினும், முடிவாக ஏற்பட்ட விஷயத்திற்கு, மேலும் காரணம் தேடுவது எந்த வகையாலும் தர்க்கசாஸ்திரத்திற்கு ஒவ்வாது. மேலும், நாம் செய்யக்கூடியன வெல்லாம் என்னவென்று பார்ப்போம். பல்வே பட்ட இந்த சம்பந்தத்தின் தோற்றங்களை முடிந்தகாரணங்களைத் தேர்ந்தவுடன் நாம் செய்யக்கூடியனவெல்லாம் செய்தாய்விட்டன வென்க. இரண்டிற்கு மேற்பட்ட யாதொரு பெருமுடிவுக்கு நாம் போகக்கூடாது நின்ற பட்சத்தில் நாம் அங்கேயேயிருந்து திருப்தியடைவதே உத்தமம்.†

---

*இப்பொருத்தங்களெல்லாம், ஐரோப்பிய தத்வஞானிகளால்கூறப்பட்டது.
† இதுவரையும் பேய்ன் பண்டிதரின் கூற்றாகும்.

இது நாம் தங்குவதற்கு உத்தமமான நிலையென்று நாம் நிச்சயமாக வறிகிறோம். இந்த வியாசத்தை நாம் எழுதப் புகுந்ததின் நோக்கம் இந்த அபிப்பிராயத்தி னின்றும் மாறுபடுதற் கல்ல. ஒன்றுமாத்திரம் கவனிக்க. தமிழில் இதற்கோ ருபமானம் இருக்கிறதென்று நாம் எண்ணலாமேனும். அது இந்த விஷயத்துக்கு முழுவதும் பொருந்துமெனக. மேலும் இந்த சம்பந்தத்தையும் அது அதிகமாகப் பிரகாசப்படுத்திவிடு மென்க. இவ்வுதாரணம், பௌதீக ஞானிக்கும் மேம்பட்டு உண்மையை விளக்காநிற்கும். மேலும் நாம் தினந்தோறும் ஒருவித சொல்லை உபயோகப்படுத்தி வருகிறோம். அச்சொல்லில் இந்த முரண்பாடும் நொடியும் அமைந்துகிடக்கவும் காணலாம். இதைக் கூறுமுன் பெய்ன் பண்டிதர் தமது மானசசாஸ்திரத்தில் (Mental Science) காட்டிய சிலவுண்மைகளைக் காட்டுவோம். ஞேயவுணர்வெல்லாம் ஞாதுருவுண்டென்பதையே அநுமானிக்கிறது என்பதே! "எல்லா ஞேயபதார்த்த சம்பந்தமான அறிவு நிலையங்களும், ஒருவகையில் மானசசம்பந்த நிலை களுமாகுமென்க." மனம் இருந்தாலொழிய,—பிரஜ்ஞையில்லாமல் இருக்கலாம்—ஒருபோதும் ஞேய பதார்த்தங்களின் அறிவு (நாம்) அடையவே மாட்டோம். உள்ளபடியே வெறும் ஞேய அறிவின் நிலைமை நமக்குக் கிட்டவே கிட்டாது. மனசு அதைத் தாங்கி நின்றாலொழிய விஷயஞானம் நமக்கெட்டாது. அந்த சமயத்துக்குமட்டும் மனசு இருக்கிறதென்ற அறிவை நாம் அடைவோமில்லை. அச்சமயம் அவ்வறிவு கெட்டழிந்து நிற்கிறது. அல்லது இப்படிச் சொல்லிப் பார்ப்போமா? ஒன்றையொன்று அவை ஒத்தில்லாமற் போய்விட்டாலும், மனசானது முழுமையும் ஜடபதார்த்தத்தோடும் ஒன்றுபட்டுப் போய்விட்டது என்று சொல்லுவோம். ஆனால் மனசானது சுத்த மனோநிலையையும் எட்டியடைதல் அமையும், அப்போது ஞேயபதார்த்தங்கள் உள்ளனவென்று அந்த உயர்ந்தநிலையில் அது உணராது. ஆனால் விஷயஞானத்தோடு சம்பந்தப்பட்டதோடு ஞாதுரு ஒன்றுண்டென் " அநுமானித்தற்கு இடனுண்டு. அப்படிப்பட்ட சுத்த மனோநிலையத்தில் ஞேயவிஷய பதார்த்தம் எங்கேயிருக்கிறது? அதுவுங்கூட இல்லாததுபோ லாய்விட்டது (சூந்யம்). ஜடம்தான் ஆதிமுதல்

தத்வம் என்று நினைத்தாலோ (அதற்கு பிரதிபந்தமாக) இந்த வுண்மை யொன்றிருக்கிறது காண்க. ஜடம் உயிர் உள்ளதாயும் உயிரற்றதாயும் காணப்படுகிறது, இந்த இரண்டு ஜடபதார்த்த அவஸ்தைகளுக்குள் எத்துணை வித்யாஸம் ஏற்பட்டுள்ளது. அத னுடைய உயிருள்ள வடிவத்தின் பெருமிதமிருக்கிறதே! அதெ ன்ன? மனசினுடைய சாந்நித்பத்தின் விசேஷத்தினு லுண்டாயதா? அல்லது ஜடத்திலேயே இயற்கையாயுள்ள ஒருகுணமா? உயிரற்ற ஜடபதார்த்தமென்று சாமான்ய சனங்கள் கூறும் யாதொரு ஜட மும், அபாரசக்திகள் பொருந்தி யிருக்கின்றவென்று நாம் முன்ன மேயே கூறினோம். அப்படியிருந்தும் ஜடத்தின் உயிரற்ற உரு வங்களின் குணங்கட்கும் உருயிள்ள உருவங்களினுடைய குணங் கட்கும் யாதானுமொ ரு ஒற்றுமையிருக்கிறதா? இது எப்படியிருந் தாலும்இருக்கட்டும் நம்முடைய உவமானத்தை நாம் சொல்ல ஆர ம்பிப்போம். அதுதான் உயிரெழுத்து மெய்யெழுத்து உவமானமெ ன்பது. கிதா சுலோகத்தை நாம் உதகரித்துக் காண்பித்தோமல் லவா? அதற்கு நாம் கொடுக்கப் பிரயத்தினப்பட்ட அர்த்தபுஷ்டி சங்கரபாஷ்யத்திலும் தேடிப்பார்த்தும் காணக் கிடைக்கவில்லை. ஒருவேளை சங்கரர் தமது முன்னமேயே தீர்மானம் செய்யப்ப ட்ட அபிப்பிராயத்துக்கு முரண்படு மபிப்பிராயத்தைச் சொல்ல வெளிவர மாட்டார்போலும். ஆகையினாலே அதில் உண்மையிரு ந்தால் அது அதன்கண்ணேயே மறைந்திருந்தது கண்டீர். அத னுடைய திறவுகோலும் சித்தாந்த நூலாசிரியர்களிடமே யிருந்து விட்டது. அதிபழமையான உவமானம் திருக்குறளில் ஒன்று உள்ளது அதன் முதற்பாவிலேயே அதுகாணலாகும்.

"அகரமுதலவெழுத் தெல்லாமாதி
பகவன்முதற் றேயுலகு."

'அ' என்ற அக்ஷரம் எல்லா எழுத்துக்களுக்கும் முதலாயுள் ளதுபோலவே, பழம்பொருளாகிய பகவான் இந்த பிரபஞ்சத் தின்முதலாக விருக்கின்றார்.

'அ' என்ற எழுத்து முதலெழுத்தாகாது சில பாஷைகளில் இருந்தாலு மிருக்கலாம். இந்த உதாரணத்தால், கடவுளினுடைய

இடத்தைப் பொறுத்த முதன்மையை விளக்கவேண்டியதாயின் இன்னும் எத்தனையோ உவமானங்களை யதற்காக நாம் காணலாம் அதனாலே பரிமேலழகர் அந்த வரிசைக்கிரமம் இடத்தைப் பொறுத்த தொன்றன்று, ஆனால் நாதமாத்திரையாகி இயல்பாற் பிறந்ததென்றார். இவ்வொலி முதல்முதல் நம்.வாய் அங்காத்ததினால் உண்டாகக்கூடியது. அவ்வொலியும், மற்ற உயிர்களுக்கும் மெய்களுக்கும் ஆதியாயுள்ளது கண்டீர். மற்றைய உயிரெழுத்துகளெல்லாம் அகாரத்தின் சிதைவினால் உண்டாகிறதேயொழிய மற்றில்லையென்க. மேல் உயிர் மெய்யின் இலக்கணந்தான் என்னை? தானே ஒலிக்கக்கூடிய வெழுத்து உயிரெழுததென் " பேசப் படுகிறது. அதற்கு வேறு ஒலியினுடைய வுதவிவேண்டியதே யில்லை. மெய்யெழுத்தோ உயிரெழுத்தின் உதவியிருந்தா லன்றித்தானே ஒலிக்கக் கூடாதென்று கூறுப. இந்த ஒலிகளின் சுபாவத்தை இன்னும் கொஞ்சம் கூர்ந்து நாம் பரியாலோசனை செய்யப் புகுவாம். நாமொவ்வொருநாளும் இந்த ஒலிகளை சப்திக்கலாகின்றோம். அப்படியிருந்தும் அவைகள் சம்பந்தமாகவுள்ள அற்புதத்தைத் தெரிந்துக் கொள்ளாமல் போய்விடுகின்றோம்.

அது ஏன் அப்படி? அடிக்கடி அவைகளை நாம் தரிசிக்கும் பழக்கத்தினாலே. "அ" என்ற அக்ஷரத்தை யுச்சரிக்க நாம் பிரயாசைப்படுகின்றோம். அது சர்வசாதாரணமாக வந்துவிடுகின்றது. வாயைத்திறப்பதினாலேயே அது வெளியாகிறது. யாதொருவிகாரமும் உதவியும் வேண்டியதில்லையே. ஆனால், நாம் (க்) என்ற சப்தத்தை யுச்சரிக்க முயற்சிப்போம். அதை இங்கிலீஷில் கே என்றும் தமிழில் க என்றும் க் என்றும் உச்சரிக்கிறோம் அதிலே ஒரு உயிரெழுத்தின் சப்தம் அடங்கியிருக்கிறது பாருங்கள். ஏ, அல்லது, அ, அல்லது, இ. இந்த உயிர்ச்சப்தத்தை நாம் பிரித்துவிடுவோம். அப்புறம் மெய்யெழுத்தை யுச்சரிக்க முயல்வோம். முயற்சி வீண் முயற்சியாகும். மெய் ஒலியே பிறக்காமற் போய்விடும். ஆகையினாலே மெய்யெழுத்தில் எப்போதும் ஒரு உயிரெழுத்தின் ஒலி இருந்தேதீரும். ஆனால் நாம் பிரஜ்ஞையோடும் அது அங்ஙனமிருப்பதாக அறிவது மட்டுமில்லை. ஆனால் தமிழ்ப்

பாஷை மேம்பாடுடைய தத்வஞானார்த்தமுடையதா யுள்ளபடியினு லே, நாம் எப்போதும் அதனுடைய உயிர்ப்பைக் கவனிப்பதற் கா சுத்த மெய்யெழுத்தை யெழுதும்போது அதன் தலைப்பில் நாம் ஒரு புள்ளியைப் போடுகின்றோம். மற்றைய வளைவானவும், நேரானவும், செங்குத்தானவுமான கோடுகளைப்பற்றி பிறிதொரு சமயம் நாம் விவரித்துக் கூறுவோம். ஆகையினாலே, (க்) என்ற மெய்யெழுத்தை நாம் எழுத ஆரம்பிக்கும்போது, நெடுங்கணக் கையுண்டு பண்ணினவர்கள் எவ்வண்ணம் மெய்யெழுத்தின் கண் உயிர் அடங்கியும் அதற்கு ஆதாரமாகியும் உயிர்ப்பைக்கொடுத் தும் உள்ளது என்று வுண்மையைக் காட்டுவான் அந்த புள்ளியை யுபயோகித்தார்களெனத் தெரியவருகிறோம். 'க' என் எழுதும் போது, அப்புள்ளி, அநாவசியம், ஏனெனில், அவ்வுயிரொலி வெளிப்படையாயிருப்பதால். ஆகவே சுத்த மெய்யொலியில், உயி ரொலி வெளியாகாது, மெய்யோடு அதுவது வாய்க்கிடத்தலையும் காண்க.

இப்புள்ளியும், உயிரை உணர்த்தி நின்றது. எல்லா உயி ரும், இப்புள்ளி அல்லது வட்டத்தை முதலாகக்கொண்டே ஆர ம்பிக்கின்றது. நாம் மிகவும் பாண்டித்யத்துடன் மனசுக்கும் தேக த்துக்குமுள்ள சம்பந்தத்தைக் குறித்து விசாரணை செய்கின்றோம். ஆனால் எப்போதாவது உயிரெழுத்துக்கும் மெய்யெழுத்துக்கு முள்ள அந்யோந்ய சம்பந்தத்தைக் குறித்து விசாரணை செய்யப் புகுந்தோமா? ஒன்று மற்றொன்றின் உதவியின்றி உயிர்வாழாத இந்தவிதமான அபூர்வ சம்பந்தமானது பிரகிருதி சம்பவங்களில் வேறெங்காவது காணக்கிடைக்குமா? மேலே காட்டிய அநந்ய சம் பந்தத்தைத் தவிர, வெறும் மெய்யெழுத்தாவது, ஒருபோதும் உயிரெழுத்தினின்றும் பிறந்ததில்லையென்றும், உயிரெழுத்தும் மெய்யினிடம் பிறந்ததில்லையென்றும், நாம் அறியலானோமல்லவா?

இவைகட்கு பிரபஞ்சத்தில் வேறெந்த இரண்டு வஸ்துக்க ளுக்குளுள்ள வித்யாஸத்தைவிட, அதிகமான வித்யாஸம் காணக் கிடக்கிறது. உற்பத்தி ஸ்தானம் வேறு. 'அ' என்ற அக்ஷரம் வாயைத் திறப்பதனாலேயே ஒலிக்கப்படும். நாவானது அடித்

தொண்டையோடு சேரக்கொண்டு வரப்பட்டாலொழிய 'க' என்ற ஒலி பிறக்கமாட்டாது; அதையே செய்துபார்த்தால் உயிர் பிற வாது. ஆனபடியினாலே உயிர்தான் மெய்க்கு பிறப்பிடமென்றும், அல்லது மெய்தான் உயிர்க்கு பிறப்பிடமென்றும் சொல்ல முடி யாது. அல்லது மெய்யெழுத்தையேனும், மெய்க்கும் உயிருக் கும் உண்டான சம்பந்தத்தையேனும் பொய்யென்று சொல்லவு முடியாது. மாயையென்றும் மயக்கமென்றும் அவைதம்மைப் பே சவும்போகாது.

ஆகையினாலே பரிணாமவாதமாவது விவர்த்தமாவது இந்த சந்தர்ப்பத்திலே பிரயோசனப்படாதென்க. ஆகவே, நாம் சொல் வதெல்லாங்கூடி யிதுவேயாம். அவைகள் பிரிக்கக்கூடாத வித மாக ஒன்றோடொன்று சம்பந்தமடைந்துள்ளன. மேலும் உயி ரெழுத்துகள் மாத்திரம்கொண்டேனும் அல்லது மெய்யெழுத்துக் கள்மாத்திரத்தினால்மட்டும் யாதொருபாஷையும்ஏற்படமாட்டாது. ஒவ்வொரு மெய்யெழுத்தும் அதேசமயத்தில் உயிர் மெய்யெழுத் தாகுமென்றும் நாம் அறியவேண்டும். மெய்யெழுத்தில் உயிர் பிரகாசமாயேனும் அப்பிரகாசமாயேனும் வாழாநின்றதென்க. உயிரெழுத்துக்கள் தனித்துநிற்பது சாத்தியமாகும். மெய்யெழுத் துக்கள்மட்டும் தனித்து நிற்றல் முடியாது. மெய்யெழுத்துக் கள் தாமே ஜீவிப்பது கானற்சலத்தின் இருப்பையே மானுமென்க. நல்லது, இதையெல்லாம் உயிருடம்பென்ற வியவஸ்தைக்குப் பொ ருத்திப் பார்ப்போம். உயிர்தான் உயிரெழுத்தாயிருக்கிறது, உட ம்பு (ஜடம்) தான் மெய்யெழுத்தாக விருக்கிறது. உயிரெழுத் துக்களுக்கும் மெய்யெழுத்துக்களுக்கும் எத்துணை வித்யாஸம் காணக்கிடக்கிறதோ அத்துணை வித்யாஸம் உயிருக்குமுடம்புக்கும் உண்டென்க. ஒன்றினின்றும் ஒன் பரிணாமத்தினாலாவது அல் லது விவர்த்தத்தினாலாவது பெறப்படுதல் குதிரைக் கொம்பேயெ ன்க. அப்படியிருந்தும் இரண்டும் பிரிக்கக்கூடாத விதமாக சேர் ந்துள்ளன. மேலும், உயிர்தனக்கே ஒரு நிலைமையை சுவதந்தர மாகீ உடைத்தாயிருந்தும், சிற்சிலவேளை தனது சொந்தமான வடிவமாகவே நின்றுவிடும் ஸ்வதந்திரத்தையது அடைந்துள்ளது.

உடம்போ தனித்து உயிரின் சம்பந்தத்தைப் பெறுமலே ஜீவிக்கும் யோக்கியதை யுடையதன்றென்க. உடம்பு என்றபொழுதே மனமும் தொக்கிநின்று, அதற்கு ஆதாரமாயும் உள்ளாயும் ஜீவிதமாயுமிருக்கின்றது. நாம் சுத்த அறிவு மயமாயிருக்கும்போது தேகம் இல்லையென்னும்படி அசத்தாயும் சூன்யமாயுமிருக்கிறது. உடம்பு சுத்த உடம்பாயிருக்கிறபோது, அறிவுகூட அங்கேயிருக்கிறது. ஆனால் தோற்றமாகிறது மட்டுமில்லை. அது உடம்புடன் ஒன்றி நிற்கிறது. மனசு அங்கேயிருக்கிற தன்மை. ஆனால் அது தன்னைத்தானே மறைத்துக்கொண்டு விடுகிறது. அதனுடைய சொரூபத்தை யது காண்பிக்கிறதில்லை. அது இல்லாதது போலவும் காணப்படுகிறது. எப்போதோ சில அபூர்வமான காலங்களில் மட்டும் ஒழிய, நம்முடைய அறிவுகேவலம் விஷய உலகவாழ்க்கையாக மட்டுமே ஒழிந்து போய்விடுகிறது. நம்முடைய உண்மை தத்வமாகிய அறிவு நிலைமையை சாதாரணமாக நாம் அறிவதே கிடையாது. இந்த உவமான உவமேயமாக அமைந்த இரண்டு திருஷ்டாந்தரங்களும் தமிழ்ப்பாஷையிலே வெகு அழகாக பரிமளிக்கப்பட்டுள்ளன கண்டீர். இவைகளிரண்டுமட்டுந் தான் உவமான உவமேயங்களாகக் கொள்ளக் கிடக்கின்றன. ஓரேவிதமான வார்த்தைகள் அல்லது சப்தங்களே உயிரெழுத்துக்கும் மெய்யெழுத்துக்கும் உடலுக்கும் உயிருக்கும் அதிவிநோதமாக உபயோகிக்கப் பட்டுள்ளன. 'உயிர்' 'மெய்' என்ற வார்த்தைகளை நாம் கேட்கும்போது என்ன அற்புத வெளிச்சம் உண்டாகிறது பாருங்கள். 'உயிர்' என்ற வார்த்தை உயிரெழுத்துக்கும் உபயோகமாகிறது. மனஸ், அறிவு, ஆன்மாவுக்கும் உபயோகமாகிறது. 'மெய்' யென்ற மொழியானது உடலுக்கும் மெய்யெழுத்துக்கும் கூட உபயோகமாகின்றது. டாக்டர் பேய்ன் என்பவர் இந்த ஒற்றுமையறிவானது ஒன்றைப் புதுதாகக் கண்டுபிடிக்கும் நவீன அறிவைக் கொடுக்கும் என்பார். பௌதிக கலாசோதனையில் அருமையாகக் கண்டுபிடிப்பதும், இவ்விதமாக சிற்சிலகாலத்திலே விளங்கிய ஒற்றுமை ஞானத்தாலே உண்டாகியதென்க. ஆதியில், நம் தமிழர்கள் உயிரெழுத்துகளையும் மெய்யெழுத்துகளையும் 'உயிர்' 'மெய்' யென்றழைத்தாரானல் அவர்கள் அப்பொ

ழுதே பிறவிஞானிகள் என்று சொல்லத் தடையென்னை?• மேலும் அவர்கள் உள்ளபடியே உயிரெழுத்துக்கும் மெய்யெழுத்துக்கும், உயிருக்கும் உடம்புக்கும் உள்ள சம்பந்தத்தைக் கண்டுபிடித்தவர்களல்லவா? இந்த உதாரணத்தை முதல்முதல் ஸ்ரீமெய்கண்டதேவரும்பின் அவர்சந்தான பரம்பரையிலும் வெகு அருமையாக விளக்கியிருக்கின்றார்கள். (சிவஞ்ஞானபோதம் II & 6-ம் குறிப்புகள் பக்கம், 12, 19, 20-ம் பார்க்க.) (திருவருட்பயன் பக்கம் 7-ம் 8-ம் பார்க்க) ஸ்ரீமெய்கண்டதேவர் இந்த சம்பந்தத்தை விளக்குவான் அதேபாசுரத்தில் ஒரு பெயரொன்று கொடுத்திருக்கின்றார். இப்பெயரும் அத்வைதமென்பது. இப்பெயர் அனேகருக்கு ஒரு அவிழ்க்கமுடியாத சிக்காய்முடிந்தது கண்டீர். அதற்கு அனேக அர்த்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனாலும் நமது தமிழ் தத்வஞானியார் இந்தவிதமாக அதை விளக்கியிருக்கின்றார்.

> "ஒன்றாகாமல், இரண்டாகாமல்,
> ஒன்றுமிரண்டு மின்றாகாமல்."

என்று அவர் அதை விரிப்பாராயினார். அது ஒன்றென்றும் சொல்லப்படாது. அதை யிரண்டென்றும் கூறப்படாது. ஒன்றுமிரண்டுமாகாமல் ஒழிந்ததோர் சம்பந்தமு மல்ல. டாக்டர் பேய்ன்துரை அதை முரண் என்றும் கூறியுள்ளாரே. அந்த விஷயத்தை சுவாமிகளது வாக்கியம் வெகு அருமையாக வெளிப்படுத்தாநின்றது கண்டீர். சித்தாந்திகளல்லாதவர் இவ்வுண்மையை அறிவது சுலபமல்ல. மேலும் தங்களபி மதத்திலேயே அவர்கள் ஊன்றிநிற்பதாலும், இவ்விதம் அறியாமற் போவதற்குங் காரணமாகின்றது. ஆனால், நாம் இன்னும் சிறப்பான நியாயங்களைவிட உயிர் மெய்யெழுத்தும் என்ற உவமானத்தையே அடிக்கடி எடுத்துக்காட்டி விஷயத்தை மிகவும் சுலபமாக விளக்கியிருக்கின்றோம்.

---

ஆகையினால் நாம் எந்த வார்த்தையை யுபயோகித்தாலுங் கூட, இந்த சம்பந்தத்தின் சுபாவம் பிரகாசமாயுள்ளது. வேத மந்திரங்கள் (முன்னெடுத்து ஆண்டவை) 'ஒன்றுந்தன்மையை' சொல்லினும் இப்போது வழக்கத்தில் வந்திருக்கும் மதங்கள் கூறப்படுவதற்கும் அதிகமாக வுயர்ந்த அர்த்தத்தில் அவைகள்

அங்ஙனம் கூறு நின்றனவென்றே நாம் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். இந்த அமைப்பில் அதிக வுயர்ந்ததும் அதிக வுண்மையானதுமான ஏகிபாவம் ஒன்று நம்மால் அடையப் பட்டது கண்டீர். "அ" காரத்தைத் தவிர்த்து இதரமான யாதொரு அக்கரங்களும் கிடையவே கிடையாவென்று ஸ்ரீ மெய்கண்ட நாதன் கூறிய கூற்றை யெவ்வளவு சத்தியமான தொன்றென்று நாம் அறியக்கடமைப் பட்டிருக்கின்றோம். ஆகையினாலே, நாம், கடவுளையன்றி வேறு யாதொரு பதார்த்தமும் கிடையா தென்று கூறத்தடை யென்னை? ஒன்றுதான் உள்ளது. தனக்கு இரண்டாவதாகும் வேறொன்றில்லாதது" இதுவும் அதியுயர்ந்த ஞானம், சுவானுபூதி, சிவானுபூதி, என்ற அநுபவத்தின் பயனாகவே வெளிப்போந்தது கண்டீர். மேலும் இதுவே திருவாசகத்தின் ஹிருதய சுலோகத்தில் அருமையாகப் பெறப் பட்டுள்ளது!

"இன்றெனக் கருளி இருள்கடிந்துள்ளத்
  தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தே
  நீயலாற் பிறிது மற்றின்மை
சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந் தொன்றாம்
  திருப்பெருந்துறை யுறை சிவனே
ஒன்று நீயல்லை யன்றி யொன்றில்லை
  யாருன்னை யறியகிற் பாரே."

J. M. N.

(இன்னும் வரும்.)

# சமாச்சாரங்கள்.

1912ம்௵ நவம்பர் ௴ 26௨ திங்கட்கிழமை பம்பாய் ராஜதானியிலுள்ள கோலபுரியினின்றும் சென்னைக்கு விஜயஞ்செய்திருந்த ஸ்ரீமந்-S. V. சிரேஷ்டி B. A. அவர்களைக்கொண்டு நமது ஸமாஜ சம்பந்தமாக சென்னை, சூளை, A. G. M. பிரைமரி பாடசாலையில் ஒரு உபந்நியாஸம் ஆங்கிலமொழியில் செய்விக்கப்பட்டது. அவர்கள் எடுத்துக் கொண்ட விஷயம் "வீரசைவத்தின் முக்கிய கொள்கைகள்" என்பது. அது காலை ஸ்ரீமந். J. M. நல்லசுவாமி பிள்ளை B. A. B. L. அவர்கள் சபாநாயகராயிருந்தனர். உபந்நியாஸகர் நாம் சமய நெறி நின்றாலன்றி உண்மை யின்பத்தை யடையவாவது நம்கடமைகளை முட்டின்றி முடித்தாவது நமக்கு எந்நாளும் இயலாது என்று பல்லாற்றானும் விளக்கக் காட்டினர். பிறகு வீரசைவமானது ஆன்மாவை அரனோடு ஒன்றுபடுத்தும் விழுமிய நோக்கமுடையதென விளம்பி, இக்கருத்தை அச்சமய அனுட்டானங்கள் எவ்வாறு முற்றுவிக்கின்றன என்பதை விளக்கினர். இத்துறையில் அவர்கள் வெளியிட்ட கருத்துகள் அச்சபையில் கூடியிருந்த பலர்க்கும் அதுவரையில் தெரியாதனவாயும், யுக்திக்கு மிகப்பொருத்தமுடையனவாயும் கேட்போர்க் கினிக்குந்தகையன வாயுமிருந்தன. சிவலிங்கத்தின் உருவ அமைப்பி னுண்மைகளை விளக்கிப் பின்னர், வீரசைவம் சொல்லும் இஷ்டலிங்க பிராணலிங்க பாவலிங்கங்களின் பூஜை எவ்வாற்றால் பயன் விளைக்கின்றன என்பதையும் மேற்றிசை யுலகநூல்வல்லார் கொள்கைகள் வழியாகவே விளக்கிக் காட்டினர். கடைசியாக அவரது சமயத்தில் சொல்லப்படும் ஷட் ஸ்தலங்களினுண்மைகளையும் கேட்போர் வியக்கக் கிளந்தனர். சிலகிறிஸ்தவப் பாதிரிமார்களும் அவ்வுபந்நியாஸத்தைக்கேட்க விஜயஞ் செய்திருந்தனர்.

***

நவம்பர் ௴ 26ம்௳ மங்களவாரம் காலை சமாஜத்தின் போஷகராகிய இராமநாதபுர அரசரவர்கள் சென்னைக்கு விஜயஞ்செ

ய்வதாக அறிந்து சமாஜத்தின் சேர்ந்தோரிற் ஸ்ரீமந் J. M. நல்ல சுவாமிபிள்ளை யவர்கள், ஸ்ரீமந் விநாயக முதலியாரவர்கள், ஸ்ரீமந் T. துரைசாமிபிள்ளையவர்கள், சித்தாந்தசரபம். அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தரமுதலியாரவர்கள், ஸ்ரீமந் வண்ணக்களஞ்சியம் நாகலிங்கமுதலியாரவர்கள், ஸ்ரீமந் கோவிந்தராஜ முதலியாரவர்கள், ஸ்ரீமந் நாகிசெட்டியாரவர்கள், ஸ்ரீமந் சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் முதலியோரும், மகாமகோ பாத்தியாயர் பிரமஸ்ரீ உ. வே-சுவாமி நாதஐயர் அவர்கள், ஸ்ரீமந் V. S. சிரேஷ்டி அவர்கள் முதலிய பல அன்பர்களும் எழும்பூரிற் புரைசரதம் நிற்குமிடத்திற் கூடி அரசரை மாலை முதலியவற்றால் மரியாதை செய்து வரவேற்றனர்.

***

திருவாடுதுறை ஆதீனத்துச் சைவப் பிரசாரகர் ஸ்ரீமான் பொ. முத்தையபிள்ளையவர்களின் உபந்நியாசங்கள்:—மே மீ 23உ மதுரைகாலேஜில் "குருபக்தி" 27உ மதுரை பிரம்மஞானமந்திரத்தில் "சைவசமயம்," செப்டம்பர்மீ 22உ தூத்துக்குடி பிரம்மஞானசபையில் "வேதாந்த சித்தாந்த சமரசம்," அக்டோபர்மீ 31உ திருநெல்வேலி ஸ்ரீ நெல்லையப்பர் கோயில் வசந்தமண்டபத்தில் "கடவுள்," நவம்பர்மீ 1உ ஷை இடத்தில் "ஆன்மா" 2உ அம்பாசமுத்திரம் ரீடிங்ரூமில் "ஆலயதத்வார்த்தம்," 3உ வீரவநல்லூர் சைவசித்தாந்த சபையில் "விக்கிராராதனம்," 4உ திருநெல்வேலி வசந்தமண்டபத்தில் "அன்பு," 8உ தூத்துக்குடி சிவநேச செல்வர்சபையில் "ஸ்ரீமெய்கண்டதேவர்சரித்திரம்," 9உ ஷையூர் சைவசித்தாந்த ரீடிங்ரூமில் "பக்தி" 14உ மயூரம் பெரிய கோயில் மண்டபத்தில் "மூர்த்தி தலம் தீர்த்தம்," 15உ ஷையூரில் "சற்குருமகிமை," 16உ ஷையூர் நாகை சோ. மா. சத்திரத்தில் "ஈஸ்வர உபாசனை," 17உ மயூரம் கூறைநாடு புநுகீஸ்வரர் கோயிலில் "தமிழ்கல்வி," 18உ ஷையூர் முருகர் மடத்தில் "தருமம்."

***

1912ஆ அக்டோபர்மீ 9உ பரங்கிமலை ஆலந்தூர் சின்னடியார்த்திருக் கூட்டத்தில், விபூதி ருத்திராட்ச பஞ்சாட்சர

த்தைப்பற்றி, சித்தாந்தசரபம் அஷ்டாவதானம் பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்கள் ஒரு நீண்டமகோபந்நியாசஞ் செய்தனர். இம்மூன்றும் சைவர்கட்கு இன்றியமையாத சாதனமென்றும், வாதபித்தசிலேட்பம் சம்பந்தத்தையுற்ற தேகத்திற்கு மணி மந்திரம் ஔடதம் மூன்றும் அத்தியாவசியமாக வேண்டியிருத்தலைப்போல, ஆணவம் கன்மம்மாயை சம்பந்தத்தையுற்ற ஆன்மாவினுக்கு உருத்திராட்சமாகிய மணியும், பஞ்சாட்சரமாகிய மந்திரமும், ஔடதமாகிய விபூதியும் அத்தியாவசியமாக வேண்டற்பாலதென்றும் எடுத்துக்கூறி, விபூதியின் மகிமையினை வேதம் ஆகமம் புராணம் பாரதம் இராமாயணம் தேவாரம் திருவாசகம் நாலாயிரப் பிரபந்தம் பகவத்கீதை முதலியவற்றில் காட்டி, இவற்றால் விளையும் இம்மைப்பயனையும், மறுமையில் விளையும் மறுமைப்பயனையும் விரிவாக விளக்கினர். இச்சந்தற்பத்தில் பகவத்கீதையில் பிரதி பாதித்துள்ள உபநிடதவாக்கியங்களை யாங்காங்குக்காட்டிச் சிவோத்கர்ஷம் யாவருக்கும் நன்கு விளங்கும்படி பிரசங்கித்தனர்.

***

சிவஞான முனிவர் புத்தகசாலை:—இப்புத்தக சாலை சென்னைச் சிவனடியார் திருக்கூட்டச் சபாமண்டபத்திலிருக்கிறது. இதிலுள்ள பல அரிய நூல்கள் பல கனவான்களால் பற்பல சமயங்களில் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டன. சமீபத்தில் ஸ்ரீமான் திருமயிலை C. S. அரங்கசாமி நாயகரவர்கள் தமது வயோதிக நிலைமையைச் சிந்தித்து தம்மிடத்திருந்த சுமார் 150 புத்தகங்களையும், சுமார் 60 ரூபா மதிப்புள்ள ஒருபெரிய நிலைப்பெட்டியையும் நன்கொடையாகக் கொடுத்தார்கள். எவரேனும் இப்புத்தகங்களை வாசிக்கலாம். பகற்காலங்களில் வீண்பொழுது போக்குவோர் இப்புத்தகசாலைக்குப்போய் நூலாராய்ச்சி செய்வரேல் பெரும் பயனுண்டாகும்.

***

பலர் தங்கள்சொந்த உபயோகத்தின் பொருட்டு பல அரிய நூல்களைச் சேகரித்து வைத்திருக்கின்றார்கள். இவர்களுக்குப் பிறகு இந்நூல்கள் பெரும்பாலும் வீணாயழிகின்றன. இவர்கள்

ஷ நாயகரவர்களைப்போல் தங்கள் வயோதிகத்தில் அவற்றை இது போன்ற புத்தக சாலைக்குக் கொடுப்பரேல் பேருபகாரமாயிருக்கும்.

***

ஸ்ரீசிதம்பர மஹோத்சவ விளம்பரம்:—ஸ்ரீமந்நடராஜ பக்த சிகாமணிகள் அவர்களுக்கு அன்புடன் அறிவிப்பது, 1912ஹு டிசம்பர்மீ 15உ ஞாயிற்றுக்கிழமை உத்சவாரம்பம்; 19உ வியாழக்கிழமை விருஷபவாகனக் காட்சி; 20உ வெள்ளிக்கிழமை கஜவாகனக் காட்சி; 21உ சனிக்கிழமை கைலாசவாகனக் காட்சி; 22உ ஞாயிற்றுக்கிழமை தங்கரத பிக்ஷாடனகாக்ஷி; 23உ திங்கட்கிழமை பஞ்சமஹாரத மஹோத்சவம்; 24உ மங்களவாரம் ஸ்ரீமந்நடராஜ மூர்த்திக்கும் ஸ்ரீசிவகாம சுந்தரியம்மாளுக்கும், இராஜசபையென்னும் ஆயிரக்கால் மண்டபத்தில் மஹாபிஷேகம் ஆருத்ரா மஹாதரிசன திவ்விய மஹோத்சவம்.

***

**நிகழும் 1912-ஹு டிசம்பர்மீ 27, 28, 29-ந் தேதிகளில் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் ஏழாவது வருடாந்தரக் கூட்டம் காஞ்சிபுரத்தில் நடைபெறும். மற்றைய விவரங்கள் அடுத்த சஞ்சிகையுடன் அனுப்பப்படும்.**

---

## உயர்ந்தபதிப்பு புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீமகாபாரதவசனம் 18-பர்வம் 4-வால்யம் | 4 | 0 | 0 |
| நால்வர் அடங்கன்முறை தேவாரம் | 3 | 8 | 0 |
| பெரியபுராண வசனம் படங்களுடன் | 1 | 8 | 0 |
| திருவிளையாடற் புராணவசனம் படங்களுடன் | 1 | 8 | 0 |
| கந்தபுராண வசனம் | 1 | 8 | 0 |
| தாயுமானசுவாமிகள் பாடல் மூலமும் உரையும் | 3 | 4 | 0 |
| அருணாசலபுராணம் மூலமும் உரையும் | 1 | 0 | 0 |
| விநாயகர் தோத்திரத்திரட்டு | 1 | 0 | 0 |
| சுப்பிரமணியர் பராக்கிரமம் | 1 | 4 | 0 |
| விநாயக பராக்கிரமம் | 1 | 4 | 0 |
| விநாயகபுராண வசனம் | 2 | 0 | 0 |
| அரிச்சந்திரபுராணம் மூலமும் உரையும் | 1 | 4 | 0 |
| நாலாயிர திவ்ய பிரபந்தம் இராகதாளத்துடன் | 2 | 0 | 0 |
| ஸ்ரீமகாபாகவத வசனம் 2-வால்யம் படங்களுடன் | 3 | 0 | 0 |
| இராமாயணவசனம் 2-வால்யம் படங்களுடன் | 4 | 0 | 0 |
| வில்லிபுத்தூராழ்வார் பாரதக்கவி | 3 | 0 | 0 |
| ஆஞ்சனேயர் பராக்கிரமம் | 1 | 0 | 0 |
| ஸ்ரீகருடபுராணவசனம் படங்களுடன் | 0 | 12 | 0 |
| நித்தியாநுஸந்தானம் தென்கலை இராகதாளத்துடன் | 0 | 8 | 0 |
| நித்தியாநுஷ்டானவிதியென்னும் திருவாராதனக்கிரமம் | 0 | 4 | 0 |
| அற்புத பூலோகரம்பை கதை | 1 | 0 | 0 |
| நன்றியற்ற சண்டாளர் சகவாசம் | 0 | 8 | 0 |
| கொழுத்தசிறிப்பு அகசிய நாடகம் | 0 | 6 | 0 |
| குடும்பசனியனென்னும் அகடவிகட சம்சாரி | 0 | 4 | 0 |
| சுகந்தபரிமள சாஸ்திரம் | 0 | 8 | 0 |
| சர்வதேவதாவசியம் பீஜாக்ஷர யந்திரங்களுடன் | 0 | 8 | 0 |
| பதிவிரதைகளின் சரித்திரம் | 0 | 12 | 0 |
| தேவலோகக் கிரிமினல்கேஸ் | 1 | 8 | 0 |

இதிற்கண்ட புத்தகங்களும் இன்னும் தங்கட்கு வேண்டிய பலவித புத்தகங்களுக்கும் அடியிற்கண்ட விலாசத்திற்கு கடிதமெழுதினால் தடையில்லாமல் வி. பி. மூலமாக சீக்கிரத்தில் அனுப்பப்படும்.

எனது கேட்டலாக் வேண்டியவர்கள் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் பெரிய கேட்டலாக் ஒன்று இனாமாக அனுப்பப்படும்.

ஆர். முருகேசப் பிள்ளை கம்பெனி,
18, சரவணப்பெருமாள் முதலிவீதி,
வேப்பேரி போஸ்ட், மதராஸ், என். சி.

*When ordering please mention the Siddhantam.*

# Books for Sale.

| | RS. | A. | P. |
|---|---|---|---|
| Tiruvuntiyar—A digest in English do. | 0 | 4 | 0 |
| Sacred Sports of Siva in English, reprinted from the S. D. | 0 | 8 | 0 |
| Siddhanta Jnana Ratnavali in English do. | 0 | 4 | 0 |
| Saint Appar—A sketch of his life and philosophy, in English, by J. M. Nallasvami Pillai, B.A., B.L. | 0 | 6 | 0 |
| Theosophy of Kural in Tamil do. | 0 | 2 | 0 |
| The Light of Grace or Tiruvarutpayan of Umapati Sivacharya by J. M. Nallasvami Pillai, B.A., B.L. | 0 | 4 | 0 |
| சைவமும் சைவஅத்வைத சித்தாந்தமும் do. | 0 | 2 | 0 |
| கடவுளின் சொரூபம் (பதியிலக்கணம்) by J. M. Nallasvami Pillai, B.A., B.L. | 0 | 2 | 0 |
| Translation of a few Hymns of Manikkavaçagar and Tayumanavar by P. Arunachalam and the Late Rev. Dr. G. U. Pope, M. A., D. D. | 0 | 4 | 0 |
| Esoteric Meaning of the Form of Devi by T. B. Vasudeava Sastrin, Retired District Munsiff. | 0 | 0 | 6 |
| The Siddhānta (English) by R. Shanmukha Mudaliyār | 1 | 0 | 0 |
| சித்தாந்தத்தேன் (Tamil) do. | 0 | 8 | 0 |
| சிவாலய திருப்பணிச்சிறப்பு do. | 0 | 2 | 0 |
| சிந்தாந்த வசனபூஷணம், அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியார் | 0 | 8 | 0 |
| பகவத்கீதார்த்த பங்கம் do, | 0 | 1 | 0 |
| சன்மார்க்கம் by V. P. Kantimatinatha Pillai, B.A. | 0 | 0 | 6 |
| Mani-Mekhalai (English) translated by The Rev. Dr. G. U. Pope M.A., D.D. | 0 | 8 | 0 |

சைவசித்தாந்த பிரசுரமாகிய துண்டு பத்திரிகைகள்:—

| | RS. | A. | P. |
|---|---|---|---|
| 1. சைவசமயம், அத்துவிதசித்தாந்தம். 100 பத்திரிகைகள் தபால்சார்ஜ் உள்பட. | 0 | 10 | 0 |
| 2. சவசமயிகளுக்கு எச்சரிப்பு. | 0 | 10 | 0 |
| 3. Saiva Religion and Advaita Siddhanta (English) | 0 | 10 | 0 |
| 4. சமரசஞானசமயம். | 0 | 10 | 0 |
| 5 Personality of God (English) | 0 | 10 | 0 |
| 6. சைவசமயம் அத்துவித சித்தாந்தம் (தெலுங்கு) | 0 | 10 | 0 |

*Apply to—*

*The Publisher,*

THE SIDDHANTA DIPIKA,

*MADRAS, N.C.*

Registered No. M. 980.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத்தின் மாதாந்தரத்
தமிழ்ப்பத்திரிகை.

"முத்தாந்த வீதிமுளரிதோழ மன்பருக்கே
சித்தாந்த வீதிவருந்தேவே பராபரமே"

தொகுதி க.] 1912-ஹு நவம்பர், டிசம்பர்மூ [பகுதி கக-கஉ.

## உள்ளுறை


சரபோபநிஷத் ... மணவழகு (ப-ர்) ... 265

அத்வைதம் ... J. M. நல்லசுவாமிபிள்ளை B.A., B.L. ... 271

திவ்வியாகம கிரந்த சங்கிகை ... காஞ்சி-நாகலிங்க முதலியார் F.M.T.S. 305

சைவசமயத்தைக்குறித்தஒரு சம்பாஷணை ... S. சச்சிதானந்தம் பிள்ளை B.A., ... 307

சமாசாரங்கள். ... பத்திராதிபர் ... 313



பத்திராசிரியர்:

சித்தாந்த சரபம்

அஷ்டாவதானம் பூவை-கலியாணசுந்தர முதலியார்

சென்னை:

மெய்கண்டான் அச்சுக்கூடம்

1912

வருடச்சந்தா ரூ. 1. தபாற்கூலி அணா 4.

இதை தயவுசெய்து அவசியம் வாசிக்கவேண்டியது

## உயர்ந்தபதிப்பு புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீமகாபாரதவசனம் 18-பர்வம் 4-வால்யம் | 4 | 0 | 0 |
| மூவர் அடங்கன்முறை தேவாரம் | 3 | 8 | 0 |
| பெரியபுராண வசனம் படங்களுடன் | 1 | 8 | 0 |
| திருவிளையாடற் புராணவசனம் படங்களுடன் | 1 | 8 | 0 |
| கந்தபுராண வசனம் | 1 | 8 | 0 |
| தாயுமானசுவாமிகள் பாடல் மூலமும் உரையும் | 3 | 4 | 0 |
| அருணசலபுராணம் மூலமும் உரையும் | 1 | 0 | 0 |
| விநாயகர் தோத்திரத்திரட்டு | 1 | 0 | 0 |
| சுப்பிரமணியர் பராக்கிரமம் | 1 | 4 | 0 |
| விநாயக பராக்கிரமம் | 1 | 4 | 0 |
| விநாயகபுராண வசனம் | 2 | 0 | 0 |
| அரிச்சந்திரபுராணம் மூலமும் உரையும் | 1 | 4 | 0 |
| நாலாயிர திவ்ய பிரபந்தம் இராகதாளத்துடன் | 2 | 0 | 0 |
| ஸ்ரீமகாபாகவத வசனம் 2-வால்யம் படங்களுடன் | 3 | 0 | 0 |
| இராமாயணவசனம் 2-வால்யம் படங்களுடன் | 4 | 0 | 0 |
| வில்லிபுத்தூராழ்வார் பாரதக்கவி | 3 | 0 | 0 |
| ஆஞ்சனேயர் பராக்கிரமம் | 1 | 0 | 0 |
| ஸ்ரீகருடபுராணவசனம் படங்களுடன் | 0 | 12 | 0 |
| நித்தியாநுஸந்தானம் தென்கலை இராகதாளத்துடன் | 0 | 8 | 0 |
| நித்தியாநுஷ்டானவிதியென்னும் திருவாராதனக்கிரமம் | 0 | 4 | 0 |
| அற்புத பூலோகரம்பை கதை | 1 | 0 | 0 |
| நன்றியற்ற சண்டாளர் சகவாசம் | 0 | 8 | 0 |
| கொழுத்தசிறிப்பு அகசிய நாடகம் | 0 | 6 | 0 |
| குடும்பசனியனென்னும் அகடவிகட சம்சாரி | 0 | 4 | 0 |
| சுகந்தபரிமள சாஸ்திரம் | 0 | 8 | 0 |
| சர்வதேவதாவசியம் பீஜாக்ஷர யந்திரங்களுடன் | 0 | 8 | 0 |
| பதிவிரதைகளின் சரித்திரம் | 0 | 12 | 0 |
| தேவலோகக் கிரிமினல்கேஸ் | 1 | 8 | 0 |

இதிற்கண்ட புத்தகங்களும் இன்னும் தங்கட்கு வேண்டிய பலவித புத்தகங்களுக்கும் அடியிற்கண்ட விலாசத்திற்கு கடிதமெழுதினால் தடையில்லாமல் வி. பி. மூலமாக சீக்கிரத்தில் அனுப்பப்படும்.

எனது கேட்டலாக் வேண்டியவர்கள் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் பெரிய கேட்டலாக் ஒன்று இனாமாக அனுப்பப்படும்.

**ஆர். முருகேசப் பிள்ளை கம்பெனி,**
18, சரவணப்பெருமாள் முதலிவீதி,
வேப்பேரி போஸ்ட், மதராஸ், என். சி.

*When ordering please mention the Siddhantam.*